ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

03.04.2013 - மலர் 10, இதழ் 05




## ஈரநில சூழற் தொகுதியின் முக்கியத்துவம்

பனிக்குகையில் திகிலான பயணம்


விலை ரூபா 15/-

கணினி கையேடு இணைப்பு

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியன் தங்கையின் திருமணம்






நல்லநாச்சான், நளாயினி என அழைக்கப்பட்டவள் பண்டாரவன்னியனின் சகோதரி ஆவாள். இவள் பண்டாரவன்னியனுடன் கூடப் பிறந்தவள் அல்ல; ஒன்று விட்ட சகோதரி என்று கூறப்படுகின்றது. தாய் தந்தையரை சிறு வயதிலேயே இழந்த இவள் பண்டாரவன்னியனின் தாய் பெரிய வன்னிச்சியால் வளர்க்கப்பட்டாள். அவள்மீது பண்டாரவன்னியனும், அவனது இரு சகோதரர்களும் அளவு கடந்த பாசம்கொண்டிருந்தனர். நல்லநாச்சனும் போர்ப் பயிற்சிகளை மிகச் சிறப்புறவே பெற்றிருந்தாள். அவளைத் திருமணம் செய்ய வன்னியில் இருந்த பல சிற்றரசர்களும், மாப்பாணர்களும் விருப்பம் கொண்டிருந்தனர். பலர் அவளை திருமணம் செய்துகொள்வதற்கென பண்டாரவன்னியனோடு நட்புப் பாராட்டி இருந்தார்கள்.

இது இவ்வாறிருக்க, நல்லநாச்சன் புலவர் புவியழகன்மீது விருப்புக் கொண்ட செய்தி எல்லோர் செவிகளுக்கும் எட்டியது. பண்டாரவன்னியனுக்கு இவ்விடயம் தெரியவர அவன் மிகுந்த கோபம் கொண்டான். தங்கையார் நல்லநாச்சனை அழைத்து நீ புலவரை திருமணம் செய்ய நினைப்பது தவறு. அரச பரம்பரையில் பிறந்த நீ அரசர்களில் ஒருவரையல்லாவா திருமணம் செய்ய விரும்பியிருக்க வேண்டும் எனக் கடும் தொனியில் கூறினான். அண்ணனின் சொற் கேட்டு அவள் கண்ணீர் விட்டாளே ஒழிய தன் விருப்பத்திலிருந்து மாறவில்லை. இதனால், பண்டாரவன்னியனும் அவனது சகோதரர்களும் புலவர் புவியழகன் மீது தீராத கோபம் கொண்டனர்.

எனினும், அவர்களுக்கு அப்புலவர் யார் என்பது தெரிந்திருக்கவில்லை. புலவர் சாதாரண குடும்பத்தை சார்ந்தவனாக இருக்கலாம் என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது. புலவர் பற்றித் தீர விசாரிக்காமல் அரச சபையில் அரசவைப் புலவராக அவனை நியமித்ததை எண்ணி அவர்கள் வேதனைப் பட்டார்கள். போர் போர் என்று போரிலேயே கவனம் செலுத்திய அவர்கள் புலவரின் பூர்வீகத்தை தெரிந்துகொள்ளாது விட்டமை மிகப்பெரும் தவறாகவே அவர்களின் சிந்தையில் பட்டது. என்ன செய்வதென்று புரியாமல் அவர்கள் இருந்தவேளை புலவர் புவியழகனே தன்னை யார் என்பதை வெளிக்கொணர முற்பட்டான்.

"வன்னி நாட்டின் பெருமைக்குரிய மன்னவரே! நான் யார்? என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளாமை உங்களின் உளவறிவும் திறனுக்கு ஒரு சவாலாகவே நான் கருதுகிறேன். இந்த விடயத்தில் மிகவும் முன்னெச்சரிக்கை கொண்டவர் என்பதை நான் உணர்கிறேன். என்னைப் போல் வேறொருவன் உங்கள் அரசவைக்கு உளவு பார்க்க வந்திருந்தால் உங்கள் வன்னி மண்ணின் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்" என்று கூறிய போது, பண்டாரவன்னியனின் கண்கள் கோபத்தால் சிவந்தன. அவன் வலது கை இடுப்பிலிருந்த கைவாளை உருவ முனைந்தது. புலவரைக் கொல்வது இழுக்கு என்ற எண்ணத்தால் அவன் பேசாதிருந்தான். புலவர் மேலும் பேசத் தொடங்கினார், "மன்னவனே! நான் வேறு யாருமல்ல. நுவரகலாவெவ வன்னியன் மகன் குமாரசிங்க வன்னியன். தந்தையாரின் ஏற்பாட்டின்படி தங்களின் போர்த் திறனையும், விவேகத்தையும், மாற்றானுக்கு அடிபணிய மறுக்கும் தங்களின் வல்லமையையும் தெரிந்துகொள்ளவே இங்கு வந்தேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றார்.

இதுவரை மௌனம் சாதித்தவாறு உள்ளக்குமுறலோடு இருந்த மன்னன் பண்டாரவன்னியனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. "நீர் என் நண்பனும், மைத்துனனுமான நுவரகலாவெவ வன்னியனின் மகனா? மிகவும் நல்லதாகப் போய்விட்டது. நீயும் அரசகுலத்தைச் சேர்ந்தவன். நீ என் தங்கையை திருமணம் செய்ய நினைப்பதில் தப்பில்லை." அப்போது அவையிலிருந்த பண்டாரவன்னியனின் சகோதரன் பெரிய மயினார் "தங்கை நல்லநாச்சானின் விருப்பப்படியே புவியழகனுக்கும் நல்லநாச்சானுக்கும் நல்ல நாளில் இனிதே திருமணத்தை நிறைவேற்றி வைப்போம்" என்றான். குறுகிய நாட்களுக்குள் அவர்கள் திருமணம் மிக இனிதே நிறைவேறியது. புவியழகனின் தந்தையான நுவரகலாவெவ வன்னியனுக்கும் செய்தி அனுப்பப் பட்டது. செய்தியறிந்த அவன் மகிழ்ச்சி அடைந்தான். பண்டாரவன்னியனுக்கும் தனக்குமிடையே மிக நெருக்கமான உறவு ஏற்பட்டதை எண்ணி மேலும் அவன் மனம் சந்தோஷமடைந்தது.

(தொடரும்)

---

விஜய் Bookvin

இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

## அறிவுத் தேடல்

நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ருபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.

**# 'பெரும் வெடிப்புக்கொள்கை' என்றால் என்ன?**

**எம்.எஸ்.லம்ஸா, இலுக்கெவெல, வேஉட.**

நாம் வாழும் இந்தப் பூமி, கோள்கள், நட்சத்திரங்கள் மற்றும் ஏனைய விண்பொருட்கள் எப்போது, எவ்வாறு தோன்றின? என்ற கேள்விக்கு விடை காணும் ஒரு கொள்கைதான் இந்த 'பெரும் வெடிப்பு' (Big bang) தத்துவமாகும். அதாவது, ஒரு பெரும் திணிவு, வெடித்துச்சிதறி அதிலிருந்து வெளியான துகள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி, அவற்றுள் சில கோள்களாகவும் விண்கற்களாகவும் ஏனைய வான் பொருட்களாகவும் மாறின என்பதுவே இதன் விளக்கமாகும். 13.7 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் எமது புவியின் தோற்றம் நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. உலகின் தோற்றம் பற்றி பல கொள்கைகள் இருந்தாலும்,பெரும் வெடிப்பு தத்துவமானது, மிகவும் பிரசித்தி பெற்றதாகவே விளங்குகின்றது. ஆனாலும், இது நாம் கற்பனை செய்வது போன்று 'வெடிப்பு' அல்ல; உண்மையில் ஒரு விரிவாக்கம்தான் நடைபெற்றது என்றே விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.



***

**# சினிமாவின் தோற்றம் பற்றிய வரலாற்றை அறியத்தருவீர்களா?**

**எம்.எல்.நளீம், ஹிஜ்ரா நகர், வாழைச்சேனை.**

சினிமாவின் தோற்றம் ஒரு நீண்டகால வரலாறாகவே உள்ளது. கினிமா (Kinema) என்ற கிரேக்கச் சொல்லே ஆங்கிலத்தில் சினிமாவாக மாற்றம் பெற்றது. இதன் அர்த்தம் அசைவு, நகர்வு, சலனம் என்பதாகும்.

முதன்முதலில் ஜோசப் பிளேட்டோ என்கிற விஞ்ஞானி 'பெனகிஸ் டிஸ்கோப்' என்கிற கருவியைக் கண்டுபிடித்தார். இதன்மூலம் படங்களின் பிம்பங்கள் கண்ணாடியில் தொடர்ச்சியாக ஓடும். இது சினிமாவின் கண்டுபிடிப்பிற்கு பேருதவி புரிந்தது. வெட்ஜ்வுட் என்கிற அறிஞர் கெமரா எனும் புகைப்படக்கருவியைக் கண்டுபிடித்தார். இதன்மூலம் ∴பிலிமைப் பயன்படுத்தாமல் வெற்றுக்காகிதத்தின் உதவியோடு நிழற்படங்கள் எடுக்கப்பட்டன. அதன்பின் அசையா நிழற்படங்கள் எடுக்கப்பட்டன. அசையா நிழற்படங்களை கருவியில் பதிவு பண்ணக்கூடிய ஸ்டில் கெமராக்களை 1840களில் தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்தார். கெமரா இருந்தும் படச்சுருள் இல்லாத குறையை 1884 இல் ஈஸ்ட்மன் என்பவர் போக்கினார். இதன்பின் ஜேர்மனியில் மேக்ஸ் கண்டுபிடித்த பயோஸ்கோப்பும் சினிமாவின் கண்டுபிடிப்பிற்கு உரமூட்டியது. எனினும், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூயிஸ் லூமியர் மற்றும் ஒகஸ்ட் லூமியர் சகோதரர்களே, உலகில் முதன்முதலாக சினிமாவை மக்களுக்கு வெளிப் படுத்தினர்.



**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479652,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk



ஏலியன் திரைப்படத்தில் வேற்றுக்கிரக உயிரினத்தை வரைவதற்கான யோசனையை ஓவியக்கலைஞருக்கு வழங்கிய, 300 மில்லியன் ஆண்டுகள் பழமைவாய்ந்த உயிரினப் படிமம் இதுவாகும். சுவிஸ் அருங்காட்சியகத்தில் இருந்து களவுபோன இந்த படிமம் தற்போது மீண்டும் கிடைத்துள்ளது.




களவாடப்பட்டு திருப்பி ஒப்படைக்கப்பட்ட படிமம்.

# 'ஏலியன்' திரைப்படத்தில் வேற்றுக்கிரக உயிரினத்திற்கு உயிரூட்டிய படிமம்

## திருடப்பட்டு மீண்டும் ஒப்படைக்கப்பட்டது!



ஏலியன் திரைப்படத்தில் வரும் மறக்க முடியாத காட்சியொன்று.



உயிரினத்தின் படிமத்தை அடிப்படையாகக்கொண்டு ஹேன்ஸ் ரெடொல்ஃப் கைகர் வரைந்த 'நிக்ரோனம் 4' என்ற ஓவியம்.

சுவிற்சர்லாந்து அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அரியவகை உயிரினமொன்றின் பழைய புதைபடிமம், அண்மையில் களவாடப்பட்டு மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஹொலிவுட் திரைப்பட இயக்குனரான ரிட்லி ஸ்கொட், 1979 ஆம் ஆண்டு தயாரித்த 'Alien' என்ற திரைப்படத்தில் வரும் கொடூரமான வேற்றுக்கிரக உயிரினத்தை உருவாக்குவதற்கு இந்த உயிரினத்தின் படிமமே முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

ஏலியன் திரைப்படத்தில் வரும் வேற்றுக்கிரக உயிரினத்தை உருவாக்கிய பெருமை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஹேன்ஸ் ரெடொல்ஃப் கைகர் என்ற சித்திரக் கலைஞரையே சாரும். கைகரின் 'நிக்ரோனம் 4' என்ற ஓவியத்தைப் பார்த்தபின்புதான், ஏலியன் தயாரிப்பாளருக்கு இந்த யோசனை தோன்றியது. ஏலியன் திரைப்படத்தில் ஒரு கட்டத்தில் உயிரினமொன்று நெஞ்சைப் பிளந்துகொண்டு வருவதனைப் போன்ற காட்சியொன்று அமைக்கப்பட்டிருக்கும். அந்த உயிரினத்திற்கு கைகரின் ஓவியமே உருவ அமைப்பைக் கொடுத்திருந்தது. இதற்காக, 1979 இல் ஒஸ்கார் விருதையும் அவர் பெற்றுக்கொண்டார்.

ஆனால், நாம் இங்கு குறிப்பிடும் இந்த வியப்புக்குரிய படிமம், வேற்றுக்கிரகத்தில் இருந்து வந்ததன்று; மாறாக, 300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்த உயிரினம் ஒன்றின் படிமம்தான் இது. ஓவியக்கலைஞர் கைகரின் சிந்தனையைத் தூண்டிவிட்ட படிமமாகும். இதனால்தான் ஏலியன் திரைப்படத்தில் அவரால் மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்ய முடிந்தது. கைகரை மட்டுமன்றி, சுவிற்சர்லாந்து அருங்காட்சியகத்திற்கு வரும் பார்வையாளர்களை ஈர்த்த பெருமையும் இந்த படிமத்திற்கு உண்டு. இவர்கள் மத்தியில் அருங்காட்சியகத் திருடன் ஒருவனும் இருந்துள்ளான். அவனால்தான் இந்த உயிரினப் படிமம் அண்மையில் களவாடப்பட்டுள்ளது. இதனை அடுத்து, சுவிற்சர்லாந்துப் பொலிஸார் இந்த படிமம் காணாமல் போனது குறித்த செய்தியை படிமத்தின் புகைப்படத்துடன் ஊடகங்களில் பிரசாரப்படுத்தினர். இதன் பயனாக, இந்த விலைமதிப்புள்ள அரிய படிமம் அருங்காட்சியகத்திற்கு மீண்டும் கிடைத்துள்ளது. அதனைப் பாதுகாப்பாக கடித உறை ஒன்றினுள் வைத்து யாரோ அஞ்சல் பெட்டியினுள் போட்டிருந்தனர்.

இது குறித்து அருங்காட்சியக நிர்வாசி கலாநிதி தோமஸ் பொலிஜர் குறிப்பிடும்போது; "இது ஒரு சிறப்புத்தன்மை மிக்க படிமமாகும். 300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கடலின் ஆழத்தில் வாழ்ந்துவந்த உயிரினத்தின் இரு பகுதிகளில் ஒன்றாகும். இது விலைமதிப்புள்ள அரிய வகையைச் சேர்ந்தது என்பதனால்தான், இதனைக் களவாடியவரால் அதனை விற்கவோ, மறைத்து வைத்திருக்கவோ முடியாதிருந்துள்ளது. அதனால்தான் களவாடப்பட்ட இந்த விடயத்தைப் பற்றி நாம் புகைப்படத்துடன் ஊடகங்களில் செய்தியை வெளியிட்டோம். அதன் பிரதிபலனாகவே குறித்த படிமம் களவாடப்பட்டு ஒரு வாரகாலத்தினுள் மீண்டும் அருங்காட்சியத்திற்கு கிடைத்துள்ளது" என்றார்.

- அஷ்வீதா

## வாசகர் முகம்

இந்த வாரம்
இடம்பெற்றிருப்பவர்
ஏ.என்.ஹாதியா,
மகியாவ,
கண்டி



DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
பெயர், முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

# சுழலும் தரை!



(சென்றவாரம்.....)

வானிலும் தரையிலும் ஐஸ் விதைக்கப்பட்டு விளைந்து கிடப்பது போன்ற காட்சியைக் கண்டு அவர்கள் வியந்தார்கள். "இங்கே நாங்கள் சுழலும் தரையை உருவாக்கியிருக்கின்றோம்" என்று இராமபுத்திரன் கூறவும் சுதனும் பிரியனும் ஒருவரையொருவர் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டார்கள்.

இனி....

திடீரென மேகக் கூட்டமொன்று அவர்களது வாகனத்தை முற்றுகையிட்டது போன்று மூடியது.

சுதனும் பிரியனும் நன்றாகவே பயந்து போனார்கள்.

"இது பனிக்கட்டி. இதுவும் செயற்கைதான். இயற்கையின் கனத்தோடும் சிலிர்ப்போடும் இது இருக்கும். இப்போது பாருங்கள்......" என்று கூறிய இராமபுத்திரன் வாகனத்தின் பக்கவாட்டிலிருந்த விசையொன்றை அழுத்தினார். வாகனத்தின் நாலா புறங்களிலிருந்தும் 'புஸ்' 'புஸ்' என்று இரைச்சலோடு ஏதோவொரு வாயு பிசிறியடித்தது. படபடவென பனிக்கட்டிகள் பஞ்சாய்ப் பறந்து போயின. தூரவிலகிப் போய் மீண்டும் கூட்டுச் சேர்ந்தன.

"வாவ் எவ்வளவு அழகாக இருக்கிறது" சுதன் அதனை ரசித்தபடியே கூறினான்.

"தரை சுழல்வதாகச் சொன்னீர்களே!" பிரியன் ஞாபகத்துடன் கேட்டான்.

"ஆமாம்! கீழே தரையைக் கவனியுங்கள். அது மென்மையாகச் சுழன்று கொண்டிருக்கிறது" இருவரும் குனிந்து தரையைக் கவனித்தார்கள். தரை சுழல்வது துல்லியமாகத் தெரிந்தது.

"நம்பவே முடியவில்லை.....!" என்றான் பிரியன்.

"அது மட்டுமல்ல; எங்களுடைய புதிய உலகத்தில் அணு உலையையும் ஏற்படுத்தியிருக்கிறோம்" என்று இராமபுத்திரன் கூறினார்.

"என்ன அணு உலையா? அப்படியானால், அணு ஆயுதங்களை நீங்கள் உற்பத்திசெய்யப்போகிறீர்களா?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் சுதன்.

இராமபுத்திரன் சிரித்தவாறே, "ரொம்ப ரொம்ப புத்திசாலித்தனமாக இருக்கிறீர்கள். எதிர்காலத்தில் எங்களைப்போன்று வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறது. வாழ்த்துக்கள்!" என்றார்.

எனினும், இராமபுத்திரனின் மனதில் சிந்தனைகள் சிறகு கட்டிப் பறந்தது.

"பாவம் இவர்களுக்கு அந்த வழிதான் இல்லை. இங்கே ஆராய்ச்சிக்குக் கொண்டுவரப் பட்ட யாருமே இதுவரை உயிரோடு திரும்பிப் போனதே கிடையாது. உங்களிருவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்!' என்ற அவரது சிந்தனைகளைப் புரிந்துகொள்ள முடியாத சுதனும் பிரியனும் உற்சாகமாக இருந்தார்கள்.

இயந்திர வாகனம் ஐஸ் தரைக்கு மேலாக மெதுவாகப் பறந்து வட்டமடித்தது. ஆங்காங்கே அழகிய பனிப்பாறைகள் வெண்முத்துக்களாகப் பூத்துக் கிடந்தன. சிறிய காற்றின் அசைவுகளால் பனித்துகள்கள் அங்குமிங்கும் சிதறி அல்லாடின.

"வேறு என்னென்ன அதிசயங்கள் இங்கிருக்கின்றன" என்று கேள்வி எழுப்பினான் பிரியன்.

இராமபுத்திரன் எதையோ சொல்ல ஆரம்பித்தபோது அவர்கள் இருவரது பார்வையிலும் அது பட்டது. அவர்களின் தலைக்கு மேலே நீலவானில் மர்மமான பொருள் ஒன்று பறந்து சென்று கொண்டிருந்தது. அது மிக மிக மெதுவாகவே பறந்தது.

"என்ன இது.....?" ஆர்வம் மேலிடக் கேட்டார்கள்.

" ஓ இதுவா.... இதுதான் செட்டிலைட். செய்மதி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீங்களே?"

சுதன் குழப்பமாகப் பார்த்தான்.

"கோள்கள், உடுக்கள் பற்றிய ஆராய்ச்சிக்காகவும் தகவல் பரிமாற்றங்களுக்காகவும் காலநிலை, வானிலை அவதானத்துக்காகவும் செய்மதிகள் வானவெளியில் சுற்றிவருவது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த செயற்கை உலகத்துக்கு இது தேவையா?" என்று ஒரே குரலில் கேட்டனர் இருவரும்.

"ஆமாம்! தேவைதான். இப்போது அண்டவெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் செய்மதிகள் சேகரித்து அனுப்புகின்ற தகவல்கள் பூமியில் உரிய இடத்துக்கு வந்து சேர முன்னரே, அதனை இடைமறித்து அறிந்து கொள்ள முயற்சிப்பதுதான். இங்குள்ள செய்மதிகளின் வேலை. இதனால், எவ்வித செலவும் இல்லாமல் நாங்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்கிறோம்." என்று இராமபுத்திரன் கூறினார்.

"இது சர்வதேச சட்டப்படி குற்றமல்லவா?" என்றான் பிரியன்.

"அத்துடன், இது மனித உரிமை மீறல்" என்றவாறு சுதனும் சேர்ந்து கொண்டான்.

"நீங்க இரண்டு பேரும் ரொம்பவும் மிரட்டுகிறீர்கள்?" மிக அதிகமாகப் பேசுகிறீர்கள் என்று கூறிவிட்டு இடி இடியெனச் சிரித்தார் இராமபுத்திரன்.

அதன் பின்னர் சுதனும் பிரியனும் வாயைத் திறக்கவில்லை.

ஐஸ் தரைகொண்ட துருவப் பிரதேசங்களைப் பார்த்து முடிந்ததும் தமது தங்குமிடம் நோக்கித் திரும்பினார்கள்.

தமக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்ததும் அவர்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. (தொடரும்)

# எலியின் கர்வம்

அடர்ந்த காட்டுப்பகுதியில் குதிரை ஒன்று புல் மேய்ந்துகொண்டிருந்தது. அது அங்குள்ள பொந்தொன்றில் வசித்து வந்த எலி ஒன்றைக் கண்டது. சிறிது நேரத்தில் அவை இரண்டும் பேசிப் பழகி சிறந்த நண்பர்கள்



ஆயின. இருந்தாலும் எலி தற்பெருமையுடன் "நான் மிகவும் வலிமையானவன். மண்ணையே துளைத்து வளை அமைத்துவிடுவேன், என்னை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. பாம்பைக் கூட விரட்டியடித்து விடுவேன்" என்று வீண் பெருமை பேசியது.

இவ்வாறிருக்கையில், ஒருநாள் எலியும் குதிரையும் சிறிது தூரம் சென்று மேய்ந்து வர முடிவு செய்தன. இரண்டும் பேசிக்கொண்டு நடந்து சென்றன. அப்போது, "நான்தான் உன்னை வழி நடத்திச் செல்வேன். நான் சண்டையில் எத்தனை எதிரிகளை வீழ்த்தியிருக்கிறேன். தெரியுமா?" என்று தம்பட்டம் அடித்துக்கொண்டே முன்னே சென்ற எலி திடீரென்று நின்றது.

"ஏன் நின்றுவிட்டாய்?" என்றது குதிரை. "உனக்குக் கண் சரியாகத் தெரியாதா? எதிரே பார் ஆறு ஓடுகிறது. எப்படிக் கடப்பது?" என்று கேட்டது எலி.


"அட ஆறா? இல்லை. இது சிறிய கால்வாய்தானே? இதனை எளிதாகக் கடந்துவிடலாமே" என்றது குதிரை.

"ஏய் குதிரையே இது கால்வாயா? எனக்கு இது ஆறு போலத்தான் தெரிகிறது. இதில் இறங்கினால் நிச்சயம் நாம் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டுவிடுவோம்" என்றது எலி. ஆனால், குதிரையோ எலியின் பேச்சைக் கண்டுகொள்ளாமல் கால்வாயில் இறங்கியது. "ஏய் எலியே, என் முழங்கால் அளவுகூட நீர் இல்லை. இதையா நீ ஆறு என்கிறாய்? உடனே இறங்கிவா" என்றது குதிரை.

"நண்பா, உனக்கு வேண்டுமானால் இது குறைந்த தண்ணீராக இருக்கலாம். ஆனால், என் உருவத்திற்கு இதுபெரிய நதி போலவே இருக்கிறது. தயவுசெய்து என்னை உன் முதுகில் ஏற்றி அக்கரையில் விட்டுவிடு. நான் என்னைப் பற்றிக் கர்வத்துடன் பேசியதை மறந்துவிடு" என்று மன்னிப்புக் கேட்டது எலி.

"ம்ம்....... இனியும் நீ வீண் பெருமை பேசி வாழாதே" என்று எலியை தன் முதுகில் ஏற்றி அக்கரையில் விட்டது குதிரை. அன்றுடன் தனது கர்வத்தை விட்டது எலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குகையின் வாயிலில் இருந்து ஆய்வு செய்யத் தயாராகும் நிலை (மேலே எடம் வோக்கர் மற்றும் கீழ்ப் பகுதியில் க்றிஸ்டியன் ஸ்டெனர்)

# பனிக் குகைக்குள் ஒரு பயணம்


இந்த புகைப்படங்களைப் பார்க்கும்போது வட அமெரிக்காவின் றொக்கி (Rocky) மலைத்தொடருக்குரிய பனிக் குகையினுள் பிரவேசிப்பது போன்ற ஓர் உணர்வு உங்களுக்கு ஏற்படலாம். 'எதிரொலிக்கும் பனிப்பகுதி' (Booming Ice Chasm) என்று இந்த பனிக் குகையினை அழைக்கின்றனர். 140 மீற்றர் ஆழ் பகுதியில் இருந்து இக்குகையினுள் விழும் ஒலியினால் எழுப்பப்படும் எதிரொலியின் பிரதிபலனாகவே, இந்த பனிக் குகைக்கு இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.

பல மீற்றர்கள் தடிப்புக்கொண்ட வெளிப்படையாகத் தெரியக்கூடிய பனித் தட்டுக்கள் இக்குகையினுள் உள்ளன. இவற்றின் மீது நடமாடும்போது, ஆகாயவெளியில் நடப்பது போன்ற உணர்வு ஏற்படுவதாக அங்கு ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.









றொக்கி மலைத்தொடரில் அமைந்துள்ள Booming Ice Chasm எனும் பனிக் குகையினுள் சென்றுள்ள எடம் வோக்கர்.

## குளிரை சிறைவைத்திருக்கும் குகை

பொதுவாக இவ்வாறான குகைகளை 'குளிரை சிறை வைத்துள்ள குகைகள்' என்றே கூறுவர். குளிர்காலத்தில் குளிர் காற்றானது, இத்தகைய குகைகளுக்குள் சென்று மீண்டும் திரும்பாததாலேயே, குகைகளில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறே, கரையும் பனித்தட்டுக்கள் காரணமாகவும் குகைக்குள் மழைநீர் சொட்டுச் சொட்டாக விழுவதனாலும் அங்கு இயற்கையாகவே நீர்நிலைகள் ஏற்பட்டு விடுகின்றன. அத்துடன், இந்த பனித்தட்டுக்களின்மீது ஆய்வாளர்கள் நடந்துசெல்லும்போது, சற்று நிலை தடுமாறினாலும் அபாயமான நீர்நிலைச் சரிவுகளில் விழுந்து விபத்துக்களை எதிர்கொள்ள நேரிடும். வியப்புக்குரிய வகையில் குகையினுள் எதிரொலிகள் தோன்றுவதனால், உரையாடுவது பெரும் சிரமத்தினை ஏற்படுத்துகின்றது. இந்தக் குகைக்குள் பயணத்தை மேற்கொண்டிருந்த எடம் வோக்கரும் நிக் வியோரும் க்றிஸ்டியன் ஸ்டெனரும் 407 மீற்றர் நீளமான இந்தக் குகையினுள் ஒருவருக்கொருவர் உரையாடும்போது, சொற்களை பிளவுபடுத்தியே உரையாடியுள்ளனர்.



## பேராபத்து

அதேவேளை, இவ்வாறான குகையினுள் இருக்கும்போது, உடலில் சிறியளவில் காயங்கள் ஏதும் ஏற்பட்டால் கூட, அது பெரும் காயங்களாக மாறக்கூடிய நிலைமை ஏற்படும். காயமடைந்தவரை குகையிலிருந்து வெளியேற்ற பல நாட்கள் செல்லும். இதனால், சுவாசிப்பதில் அசௌகரியமும் இரத்தத்தில் ஒட்சிசன் குறைவடைவதால் இறக்கவும் நேரிடும் என்று இது குறித்த புகைப்படம் பிடித்த பெல்ஜிய புகைப்படப் பிடிப்பாளர் ஃப்ரென்சிஸ் சேவியர் தெரிவிக்கின்றார்.

குகையினுள் இருக்கும் பனித்தட்டுக்கள் காரணமாகவே ஆபத்துகள் நிகழ்கின்றன. அதன் மீது நடப்பது மிகவும் சிரமமான விடயமாகும். அத்துடன், உடலை வாட்டும் கடும் குளிரும் நிலவுகின்றது. இவ்வாறான சூழலில் உடலின் வெப்பநிலையினைத் தக்க வைத்துக்கொள்வதும் சிரமமாகும்.


''இங்குள்ள சிறிய குறுக்குப் பாதையினுள் வியப்பூட்டும் வகையில் பனி இறுக்கமடைகின்றது. அதன் முடிவில் என்ன இருக்கின்றது என்பது எவருக்குமே தெரியாது. அங்கு எவருமே சென்றதில்லை'' என்று ஃப்ரென்சிஸ் மேலும் தெரிவித்தார்.



## அதிக குளிர் நிரம்பிய குகைகள்

'குளிரை சிறை வைத்துள்ளவை' என்று அர்த்தம்கொள்ளும் வகையில் அழைக்கப்படும் இத்தகைய குகைகள் 'Cold-trap Cave' என்று அழைக்கப்படுகின்றன. குளிர்காலத்தில் இக்குகைக்குள் செல்லும் குளிர்காற்று மீண்டும் திரும்பாததாலேயே அங்கு குளிர் நிரம்பிய தன்மை நிலவுகின்றது. குளிர்காலத்தில் அதிக அடர்த்தியும் நிறையும் கொண்ட குளிர்காற்று குகையின் ஆழ்பகுதிக்குச் செல்கின்றது. மேல்நோக்கி வரும் வெப்பக்காற்று குகையின் வாயிலில் இருந்து வெளியேறுவதற்குப் பதிலாக, குகையின் ஆழ்பகுதியில் தரித்து விடுகின்றது. வெப்பகாலத்தில் வெப்பமடையும் சுற்றுப்புறக் காற்று குகைக்குள் பிரவேசிக்க முடியாமைக்கு குகைக்குள் உள்ள பனிக்காற்றே காரணமாக உள்ளது. அதனால்தான், இத்தகைய குகைகளில் வருடம் முழுவதும் குளிர்தன்மை நிலவுகின்றது.

(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரநில சூழல் தொகுதி

ஈரநில சூழல் தொகுதியானது, உயிர் பல்வகைமையைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அத்துடன், சுற்றாடல் சமநிலையைப் பேணுவதற்கு மிகவும் தேவையானதொரு சூழல் தொகுதியாகவும் இதனைக்கொள்ளலாம். அவ்வாறே, ஈர நிலமானது, சூழல் கலாசார அடிப்படையிலும் சமூக பொருளாதார துறைகளிலும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஈரநிலத்தோடு சம்பந்தப்பட்ட வரலாறு மனித நாகரிகத்தின் ஆரம்பத்தோடு தொடர்புடையது எனலாம். இந்துநதிப் பள்ளத்தாக்கின் மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நாகரிகமும் எமது நாட்டின் மல்வத்து ஓயாவை அண்டி உருவான முதல் குடியேற்றமும்கூட ஈரநிலத்தை அடிப்படையாகக்கொண்டு உருவானவையே ஆகும்.



## ஈரநிலங்களை வகைப்படுத்தல்

- இயற்கை ஈரநிலம்
  - நன்னீர் ஈரநிலம்
    உதாரணமாக: உள்ளூர் நீர்த்தேக்கம்/நன்னீர் சதுப்பு நிலம்
  - கடல்நீர் மற்றும் உப்புநீரைக் கொண்ட ஈரநிலம்
    உதாரணமாக: கழிமுகம்/ களப்பு/ கடலை அண்மித்த ஈரநிலம்/ ஓரளவு உப்பு நீர்.
- செயற்கை ஈரநிலம்
  உதாரணமாக: கட்டப்பட்ட நீர்த்தேக்கம்/ குளங்கள்/ தடாகங்களில் வளர்க்கும் உயிரின வேளாண்மை வயல்கள்/ ஏரிகள்.

## இலங்கையில் ரம்சார் ஈரநிலங்கள்

தற்பொழுது இலங்கையில் 5 ரம்சார் ஈரநிலங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவை பூன்தல தேசிய வனம், மாதுகங்கைக்கு அருகில் உள்ள சூழல் தொகுதி, ஆனவிழுந்தாவ சரணாலயம், வங்காலை சரணாலயம் மற்றும் குமண சரணாலயம் என்பனவாகும்.

| ரம்சார் ஈரநிலம் |
|---|
| பூந்தல தேசிய வனம் |
| ஆனவிழுந்தாவ சரணாலயம் |
| மாதுகங்கை |
| வங்காலை சரணாலயம் |
| குமண சரணாலயம் |



## இலங்கையின் ஈரநில சூழல் தொகுதியின் தனித்துவம்

எமது பிரதான உணவு சோறாகும். இதற்கு மூலாதாரமாய் அமைகின்ற நெல், ஈரநிலத்திலுள்ள வயல்வெளிகளில் விளையும் ஒரு பயிராகும். நெற்பயிரானது, இந்நாட்டின் உயர்ந்த-பாரம்பரிய பல்வகைமையை வெளிப்படுத்தும் பயிராகும்.


அத்துடன், நாடு பூராகவும் பரவியுள்ள பெரியதும் சிறிதுமான 103 நீரேந்து பிரதேசங்களுடாக, பாரிய ஈரநிலத் தொகுதியொன்று உருவாகியுள்ளது. இந்த ஈரநிலத்திலுள்ள நன்னீரானது, 91 வகையான மீன் இனங்களின் வாழ்விடமாகத் திகழ்கின்றது. இம்மீன்களில் 50 வகைகள் இலங்கைக்கு மாத்திரம் உரித்தானவையாகும். இதனை 2012 ஆம் ஆண்டுக்கான செந்தரவு பட்டியலில் நாம் காணலாம்.

இந்நாட்டில் காணப்படும் குளங்களில் பெரும்பாலானவை கலாசார அடிப்படையிலும் தொல்பொருள் ஆய்விலும் முக்கிய இடத்தை வகிப்பதோடு, ஈரநில சூழலை அண்மித்தே குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புளத்சிங்கள பிரதேசத்தில் அமைந்துள்ள வளவ்வத்த வத்துரான காடுகளே இந்நாட்டிலுள்ள ஒரே ஒரு நன்னீர் சதுப்புக் காடுகளாகும்.

ஈரநில சூழல் தொகுதியின்கீழ் உள்ள முருகைக்கற்களும் கண்டல் சூழல் தொகுதியும் சுற்றுலாத்துறைக்கு மிகவும் அவசியமானதொன்றாகும்.

## ரம்சார் மாநாடும் உடன்படிக்கையும்

1971 இல் ஈரான் நாட்டின் ரம்சார் நகரில் நடைபெற்ற ஈரநிலம் குறித்த சர்வதேச மாநாட்டில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அந்த வகையில், ஈரநிலச் சூழலை அண்டி வாழும் உயிரினங்களின் வாழ்விடம் குறித்து நிறைவேற்றப்பட்ட சர்வதேச தீர்மானமே 'ரம்சார் உடன்படிக்கை' என அழைக்கப்படுகின்றது. இந்த மாநாடு நடத்தப்பட்ட நகரை நினைவு கூருமுகமாகவே, இந்த உடன்படிக்கை 'ரம்சார் உடன்படிக்கை' என அழைக்கப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டு முதல் இலங்கையும் ரம்சார் மாநாட்டுக்குச் சமமான அங்கமாக செயற்படுகின்றது. இன்று இந்த உடன்படிக்கைக்கு ஆதரவாக 165 நாடுகள் ஒப்பமிட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியின் முக்கியத்துவம்



## ஈரநிலம் என்பது.....

நீர் மட்டமானது, நில மட்டத்திற்கு மேல் அல்லது அதனை அண்மித்ததாக அல்லது கீழ்மட்டமாக நிரம்பலடையக்கூடியதாகவும் நிரம்பல் செயன்முறை மூலம் நீரியற் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அளவிற்கு தகுதியையும் பெற்றிருந்தால் அது 'ஈரநிலம்' எனப்படுகின்றது. இது தவிர,தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீரால் மூடப்பட்ட பகுதி 'ஈரநிலம்' ஆகும் என்று பொதுவான வரைவிலக்கணமும் உண்டு.

| ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்திய தினம் | நில அளவு (ஹெக்டேயர்) |
|---|---|
| 1990/06/15 | 6210 |
| 2001/08/03 | 1397 |
| 2003/12/11 | 915 |
| 2010/07/12 | 4839 |
| 2010/10/29 | 19011 |




## ரம்சார் ஈரநிலம் (Ramsar Wetland)

ரம்சார் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களைக்கொண்ட அனைத்தும் ரம்சார் ஈரநிலங்கள் அல்லது சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களாகக் கருதப்படுகின்றன. இன்று உலகெங்கும் 2106 இடங்கள் ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இது உலகின் மொத்தநிலப்பரப்பில் 205, 131, 098 ஹெக்டேயர் நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளது.

## சர்வதேச ஈரநில தினம்

1971 ஆம் ஆண்டு ஈரானின் ரம்சார் நகரில் நடைபெற்ற மாநாட்டின் இறுதியில் ஏற்படுத்தப்பட்ட ரம்சார் உடன்படிக்கைக்கு சார்பாக நாடுகள் கையெழுத்திட்ட தினமாகிய பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதியே 'சர்வதேச ஈரநில தினம்' ஆகும். அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை நினைவு கூரும் முகமாக ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதியை 'சர்வதேச ஈரநில தினம்' என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. 1997 ஆம் ஆண்டு முதல் ஈரநில தினம் சர்வதேச மட்டத்தில் அனுஷ்டிக்கப்பட ஆரம்பித்தது.

## ஈரநில சூழல் தொகுதியின் முக்கியத்துவம்

ஈரநிலமானது, சூழல் தொகுதியில் மிகவும் உயர்ந்த உயிரின பல்வகைமையைக் கொண்டுள்ளதோடு, பல்வேறு உயிரினங்களுக்கு உணவையும் உறைவிடத்தையும் வழங்குகின்றது. நீரைத்தேக்கி வைக்கும் தன்மை ஈரநிலத்தில் காணப்படுவதோடு, அதிக மழைவீழ்ச்சியுள்ள காலகட்டத்தில் மழைநீரைத் தேக்கி வைப்பதால், வெள்ளம் போன்ற ஆபத்துக்களில் இருந்து மக்களின் குடியேற்றப் பிரதேசங்களை பாதுகாப்பதில் ஈரநிலம் முக்கிய பங்களிப்பைச் செய்கின்றது. நீரைத்தேக்கி வைப்பதும் தேவையானபோது மீண்டும் அதனை விடுவிப்பதுமான இயல்பானது, புவியில் நீர் மட்டத்தை முறையாகப் பேணுவதில் ஈரநிலம் பெரும் பங்களிப்பைச் செலுத்துவதாக அமைந்துள்ளது.

அத்துடன், மீன்பிடிக் கைத்தொழிலுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வீடமைப்பிற்காக மூலப்பொருட்களை பெறுவதிலும் ஈரநிலம் முக்கிய பங்காற்றுகின்றது. அழகியல் துறையில் மிகவும் உயர்ந்த சூழல் தொகுதியைக் கொண்டதும் இந்த ஈரநிலமே ஆகும். அதுமட்டுமன்றி, சுற்றுலாத்துறையில் முக்கியத்துவம் வாய்ந்த சூழல் தொகுதியினையும் ஈரநிலங்கள் கொண்டுள்ளன.

## ஈரநில சூழல் தொகுதி எதிர்நோக்கும் நெருக்கடிகள்

சனத்தொகை அதிகரிப்பு, இடநெருக்கடி என்பன காரணமாக ஈரநிலத்தை மண்போட்டு நிரப்புவதாலும் அதன்பின்னரான கட்டட நிர்மாணங்களாலும் ஈரநிலங்கள் அருகி வருகின்றன. கழிவுகளைக் கொட்டும் இடங்களாக இதனைப் பயன்படுத்துவது பாரிய பிரச்சினையாகும். இதனால், இப்பகுதிக்கே உரிய தாவரங்களும் உயிரினங்களும் அழிவடைகின்றன. இயற்கையாக நீரைப் பெறும் பாதையை தடை செய்தல் அல்லது பாதையை மாற்றுதல் மற்றும் இயற்கை அழிவுகள் என்பனவும் ஈரநிலங்கள் எதிர்நோக்கும் பிரதான நெருக்கடிகளாகும்.

இரஞ்சித் ஜெயகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன அழுத்தம் பொதுவாக, கவனக்குறைவு, முடிவுகள் எடுப்பதில் சிக்கல், ஞாபக மறதி, குழப்பம், எதிர்மறை சிந்தனைகள், தெளிவற்ற சிந்தனைகள், தவறான முடிவுகளை எடுத்தல் போன்ற நிலைகளை ஏற்படுத்துகின்றது. தலைவலி, அஜீரணக் குறைபாடுகள், தூக்கமின்மை, தசைப்பிடிப்பு, உடல் வலி, நெஞ்சு வலி, சீரற்ற இதயத்துடிப்பு, உயர் இரத்த அழுத்தம், உடல் எடை அதிகரித்தல் அல்லது குறைதல், மூச்சுத் திணறல், தோல் நோய்கள், புற்றுநோய் என ஏராளமான உடல் நோய்களையும் ஏற்படுத்துகின்றது. உடல் சார்ந்த பாதிப்புகளினால் தன்னம்பிக்கைக் குறைபாடு, கோபம், எரிச்சல், பசியின்மை, சீரற்ற தூக்கம்,

# பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும் மன அழுத்தம்

தனிமையை விரும்புதல், கடமைகளைத் தவிர்த்தல், பதட்டம் என ஏராளமான செயற்பாடுகளுக்கு எம்மை அறியாமலேயே இட்டுச் செல்கின்றது. இந்த மன அழுத்தத்தை மனோதத்துவம் பல்வேறு விதமாகப் பிரிக்கின்றது.




அந்தவகையில், திடீரென நிகழும் ஒரு நிகழ்வினால் ஏற்படும் மன அழுத்தத்தை 'எக்யூட் ஸ்ட்ரெஸ்ட்' என்று வகைப்படுத்துகின்றது. இதற்குரிய அடிப்படைக் காரணம் நமக்குத் தெரிந்ததாகவே இருக்கும். இது விரைவிலேயே காணாமல் போய்விடுகிறது. தொடர் நிகழ்வுகளினால் ஏற்படும் மன அழுத்தத்தை 'எபிசோடிக் எக்யூட் ஸ்ட்ரெஸ்' என்கிறார்கள். இது வேலைப்பளு, தொடராக ஏற்படும் பிரச்சினைகள், போன்ற தொடர் காரணிகளால் ஏற்படுகின்றது. வறுமை, நீண்டகால வேலையின்மை, நிம்மதியற்ற குடும்பச் சூழல் இவையெல்லாம் தரும் மன அழுத்தத்தை 'க்ரோனிக் ஸ்ட்ரெஸ்' என்று வகைப்படுத்துகிறார்கள். 'ட்ரேமிக் ஸ்ட்ரஸ்' என்பது இன்னொரு வகை. ஏதோ ஒரு அதிர்ச்சியில் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீண்டு வராமல் இருக்கும் நிலையே இவ்வாறு அழைக்கப்படுகின்றது. அத்துடன், கணினித்துறையில் இந்த மன அழுத்தம் அதிகமாக இருப்பதால், பெரும்பாலான நிறுவனங்கள் ஊழியர்களின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்குப் பல முயற்சிகளை எடுத்து வருகின்றன.

(தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)


SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்





# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5056
மே.நக்ஷயன்,
பூம்புகார்,
மட்டக்களப்பு.


அங். இல: 5057
எஸ்.சிவக்குமார்,
கல்பிட்டி வீதி,
நுரைச்சோலை.


அங். இல: 5058
ஆர்.எஃப்.சம்லா,
நிக்கத்தன்ன,
கட்டுகஸ்தோட்டை.


அங். இல: 5059
எஸ்.உதேஷிகா,
எல்கடுவ வீதி,
வத்தேகம.


அங். இல: 5060
எம்.மதுசன்,
ரெயின்போ ஒழுங்கை,
மன்னார்.


அங். இல: 5061
ஞா.குகப்பிரியன்,
ஆனந்த நகர்,
கிளிநொச்சி.


அங். இல:5062
எஸ்.சுபாஷினி,
கஹவத்தை,
இரத்தினபுரி.


அங். இல: 5063
பாத்திமா பஸ்ரா,
வாரண வீதி,
திஹாரிய.


அங். இல: 4564
எஃப்.ஃபஸ்மிலா,
முசல்பிட்டி,
பள்ளிவாசல்துறை.


அங். இல: 4565
ந.மு.ஹபீழ்,
ஜாயா வீதி,
மூதூர்-05.


அங். இல: 4566
செய்னூத்தீன் ஸாஹிப்,
சவளக்கடை,
கல்முனை.


அங். இல: 4567
ஏ.அல்ஹாபிழ் பௌமி,
ஸ்டோர் வீதி,
பிறைந்துரச்சேனை.

# தெரிந்து கொள்வோம்

* இலங்கைக்கு 1505 இல் வந்த முதலாவது போர்த்துக்கேய தளபதி யார்?
  லொரென்கோ டி அல்மெய்டா
* தேவநம்பிய தீசன் (கி.மு.247-207) அனுராதபுர ஆட்சிக்காலத்தில் திஸ்ஸவாவியைக் கட்டினான். 2 ஆம் அக்கபோ மன்னன் (கி.பி. 531-551) கட்டிய குளங்கள் எவை?
  கந்தளாய் குளம், கிரித்தலைக் குளம், 27 கி.மீற்றர் தூரமான மினிப்பே கால்வாய்




* 'Mein Kampf' என்ற நூலை எழுதியவர் யார்?
  அடோல்ஃப் ஹிட்லர்- ஜேர்மனி



* பப்பாசியின் விஞ்ஞானப் பெயர் என்ன?
  கரிக்கா பப்பாயா (Carica Papaya)
* அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்கு கங்காரு ஆகும். அதேபோன்று பிரான்ஸ் நாட்டின் தேசிய மலர் எது?
  லில்லி மலர்





* மரதன் ஓட்டத்தின் தூரம் எவ்வளவு?
  42 கி.மீற்றர் (26 மைல்)
* இலங்கையில் மாகாணசபைகள் முறை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
  இந்திய- இலங்கை ஒப்பந்தத்திற்கமைய 1987 இல் 13 ஆவது அரசியல் 'யாப்பு சட்டப்படி' உருவாக்கப்பட்டது
* 'தேசவழமைச் சட்டம்' யாருக்கு செல்லுபடியாகின்றது. இது எப்போது அமுலாக்கப்பட்டது?
  யாழ்ப்பாண தமிழ் பேசும் மக்களுக்காக 1707 இல் ஒல்லாந்தரால் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போதும் நடைமுறையிலுள்ளது.

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................
வகுப்பு: ..............................................................
திகதி: ..............................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறந்த பண்புகளை வளர்த்துக்கொள்வோம்



நாம் சமூகத்தோடு ஒன்றிணைந்து வாழ்பவர்களாக இருக்கின்றோம். இவ்வாறு சமூகத்தோடு இணைந்து வாழ முற்படுகையில், ஒவ்வொருவரும் தனக்கும் ஏனையோருக்கும் பயன்படும் வகையிலான பண்புகளை வளர்த்து ஒழுக்கத்தை விருத்திசெய்து கொள்ள வேண்டும்.

ஒருவர் சிறந்த பண்புகளோடும் ஒழுக்கத்தோடும் செயற்படும்போதே, அவருக்கென்று சமூகத்தில் சிறந்த அங்கீகாரமும் கௌரவமும் கிடைக்கின்றது. சமூகமானது, கற்றவர்களை எப்போதும் ஒரு வழிகாட்டியாகவும் சிறந்த முன்மாதிரியாளராகவுமே பார்க்கின்றது. ஆகவே, ஒரு சமூகமே கற்றவரைப் பின்பற்றும்போது, அவரது பண்புகள் ஏனையவர்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றன.

எனவே, கற்றவர்கள் எப்போதும் சிறந்த பண்பாளராகவும் வழிகாட்டியாகவும் திகழ வேண்டும். சிறந்த பண்புகளில் முதன்மையான பண்புகளாக உதவிசெய்தல், விட்டுக்கொடுத்தல் என்பன காணப்படுகின்றன. இவ்வாறான பண்புகளை வெளிப்படுத்துவதானது, எமக்கு சந்தோஷத்தையும் உள நலனையும் ஏற்படுத்துகிறது.

அந்தவகையில், மாணவர்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்படுவது என்பது தற்போதைய சமூகத்தைப் பொறுத்தவரை குறைவடைந்து செல்கின்றது எனலாம். நாம் மற்றவர்களுக்காக உடைமைகளை, உணர்வுகளை, பொருட்களை, சேவைகளை, பாசத்தை, சகிப்புத் தன்மையை அர்ப்பணம் செய்வதே, விட்டுக்கொடுப்பும் - உதவியுமாகும். உதவி செய்யும் மனப்பாங்கு இருந்தால்தான் விட்டுக்கொடுப்பு அங்கு காணப்படும்.

ஒவ்வொருவரும் தத்தமது நலத்தைப் பேணுவதில் எவ்வளவு அக்கறை காட்டுகின்றனரோ, அதேபோன்றுதான் ஏனையோரின் நலனிலும் அக்கறை காட்ட வேண்டும். ஏனையோர் தவறு செய்யும்போது மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு என்பவற்றை வழங்க வேண்டும். அத்துடன், சிறந்த சுகாதார வாழ்க்கைக்கு உடல் நலம் எவ்வளவு அவசியமோ, அவ்வாறே, உள நலமும் அவசியமாகின்றது. இந்த உள நலத்தைப் பூர்த்தி செய்வது சிறந்த பண்புகளை வெளிப்படுத்துவதால் கிடைக்கக்கூடிய வெகுமதிகளாகும்.

ஒருவர் வாழும் சமூகத்தில் நற்பண்புகள் காணப்பட்டால், அங்கு முரண்பாடுகள், வீண் வாதங்கள், சண்டை, கோபம், கிளர்ச்சி என்பன ஏற்படாது. மாறாக, அங்கு ஒற்றுமையும் சகிப்புத்தன்மையும் அமைதியும் மேலோங்கிக் காணப்படும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# செவ்வாயில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதற்கான கண்டுபிடிப்பு

செவ்வாய் கிரகத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதற்கான அறிகுறிகளை நாஸா விண்வெளி மையம் கண்டறிந்துள்ளது. நாஸா அனுப்பிய விண்கலங்கள் அண்மையில் வெளியிட்ட புகைப்படங்களை ஆராய்ந்ததை அடுத்தே, 50 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய் கிரகத்தில் கடும் பனிப்பொழிவு மற்றும் மழை காரணமாக, மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்பது தொடர்பான அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளன.





வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திய பேரழிவு, நீரோட்டம் போன்றவற்றின் அறிகுறிகள் இப்போதும் காணப்படுகின்றன. அத்துடன், செவ்வாய் கிரகத்தில் நீரோடைகளும் கடல்களும் இருந்ததற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன என நாஸா அறிவித்துள்ளது.


பூமியைப் போலவே, வளிமண்டலக் கூறுகளைக்கொண்ட கிரகம் செவ்வாய் ஆகும். அதன் துருவங்களில் வெண்மையான பகுதி காணப்படுகின்றது. கோடைக் காலத்தில் செந்நிறமாகவும் மழைக்காலத்தில் நீலமாகவும் செவ்வாய் காட்சியளிக்கிறது. அதற்குக் காரணம், செவ்வாய் கிரகத்தில் அடிக்கடி ஏற்படும் புழுதிப் புயல்தான் என நாஸா மேலும் குறிப்பிட்டுள்ளது.

# விண்வெளியில் மரபணு மூலக்கூறுகள்

பூமிக்கு வெளியே, விண்வெளியில் மரபணு (DNA) மூலக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. NRAO எனும் விண்வெளியியல் நிறுவனத்தில் பணிபுரியும் டோனி மற்றும் அவரது குழுவினராலேயே இந்த மரபணு மூலக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



வேற்றுக்கிரகவாசிகளின் நடமாட்டம் தொடர்பாக பல சர்ச்சைகள் காணப்படுகின்ற இந்த வேளையில், இவ்வாறு மரபணு மூலக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையானது, பூமிக்கு வெளியில் வேறு உயிரினங்கள் வாழ்வதை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளதென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I

பெயர்: ................................................ நேரம்: 45 நிமிடங்கள்

★ தரப்பட்ட இரு உருக்களையும் ஒன்றன்மீது ஒன்றை வைக்கும்போது, கிடைக்கும் உருவை தெரிவுசெய்க.

01) 

02) 

03) மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவுசெய்க.



04) A யிற்கும் B யிற்கும் பதிலாக மிகப் பொருத்தமான சொற்சோடியைத் தெரிவுசெய்க.

| | | |
|---|---|---|
| A | படகு | விமானம் |
| மாடு | மீன் | B |

1. சைக்கிள் - பட்டம்
2. வண்டி - கழுகு
3. குதிரை - பட்டம்

05) ஒரு சுவரின் நீளம் 2m, அதன் அகலம் 2m எனின், அச்சுவரின் பரப்பளவு யாது?

1. $4m^2$ 2. 4m 3. $6m^2$

06) ஒரு விளையாட்டு மைதானத்தைச் சுற்றி சிவப்பு, நீலம், பச்சை எனும் நிறக் கொடிகள் ஒழுங்கு முறையில் நடப்பட்டுள்ளன. இதில் 31 ஆவது கொடியின் நிறம் யாது?

1. சிவப்பு 2. நீலம் 3. பச்சை

07) தவளையொன்று ஒரு பாய்ச்சலில் 1m பாயுமாயின், அத்தவளை 5 பாய்ச்சலில் பாயும் தூரம் எவ்வளவு?

1. 4m 2. 5m 3.6m

08) கமலாவின் தந்தையின் நிறை கமலாவின் நிறையின் இருமடங்காகும். தந்தையின் நிறை 56 kg எனில், கமலாவின் நிறை யாது?

1. 25kg 2. 40kg 3. 28kg

09) 'மாலா நடனம் ஆடினாள்' என்ற வாக்கியத்தின் எழுவாய்ச் சொல் யாது?


1. நடனம் 2. ஆடினாள் 3. கீதா

10) வெற்றிலைக் கொடி அங்குமிங்கும் அசைந்துகொண்டிருந்தது. காரணம்;


1. காற்றினால் 2. வெள்ளத்தினால் 3. கொழுகொம்பின்றி

11 நெம்புகோலின் பயன் யாது?

1. பொருட்களை நகர்த்த உதவுதல் 2. ஆணி அடிக்க உதவுதல்
3. ஆணி பிடுங்க உதவுதல்

12)  பின்வரும் உருவில் காணப்படும் கோணங்கள் யாவை?

1. விரிகோணம் 2. கூர்ங்கோணம் 3. செங்கோணம்

13) 

அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது?

1. 48cm 2. 56cm 3. 32cm

14) வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும் பிரதான நோய்க்காவி எது?

1. எலி 2. ஈ 3. நுளம்பு

15) இலங்கையின் தேசிய இலச்சினையில் காணப்படும் தர்மசக்கரத்தினால் உணர்த்தப்படும் விடயம்.


1. தார்மீகம் 2. சௌபாக்கியம் 3. தன்னிறைவு

16) நேற்றைக்கு முன்தினத்தில் இருந்து நாளை மறுநாள்வரை எத்தனை நாட்களாகும்?

1. 7 2. 5 3. 6

17) பெறுமதி கூடிச்செல்லும் ஒழுங்கில் அமைந்த உரோம இலக்கத் தொகுதியை தெரிவுசெய்க.

1. V, IV, IX, XI 2. VI, IV, IX, XL, VII 3. VI, IX, XI, XV

18)  இதனைப் போன்ற 6 தளவடிவங்களைக்கொண்டு ஆக்கக் கூடிய திண்ம வடிவம் யாது?

1. சதுரம் 2. சதுரமுகி 3. கனவுரு





19) 4 கழிந்து 10 நிமிடத்துக்கும் 4 கழிந்து 30 நிமிடத்திற்கும் இடையில் எத்தனை நிமிடங்கள் உள்ளன?

1. 30 நிமிடங்கள் 2. 20 நிமிடங்கள் 3. 25 நிமிடங்கள்

20) 1kg பருப்பின் விலை ரூ 200.00 எனின், 50g பருப்பின் விலை யாது?

1. ரூ 10.00 2. ரூ 20.00 3. ரூ 5.00

21)  நிழற்றப்பட்ட பகுதி முழுவதின் பின்னம் என்ன?

1. 1/8 2. 1/4 3. 2/6

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

## வினாத்தாள் -II விடைகள்

*(மார்ச் 20, 27 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

01) I. இடர் II. கண்+நீர்
III. மனம் உருகுதல்/மனம் கசிதல்/ மனம் நெகிழ்தல்
IV. இடர் வரும்போது/ உள்ளம் இரங்கிடும் போது
V. மாந்தர்/அப்பா

02) I. வளி II. பானம்

03) I. சூரியனைக் கண்டதும் தாமரை மலர் மலர்ந்தது
II. வானில் நட்சத்திரங்கள் மின்னுகின்றன

04) I. மனமின்றிச் செய்தல் II. கொடுத்த வாக்கை மீறல்

05) I. சுயநலவாதி II. அநாதை

06) I. வறுமையிற் செம்மை II. ஒற்றுமையே பலம்

07) I. தன்மைப் பன்மை II. படர்க்கை ஒருமை


08) சிவாந்தினி துணிப் பொம்மைகள் செய்வதைக் கூர்ந்து கவனித்தாள்

09) I. Teacher II. Hospital

10) I. Clock II. Black board

11) I. தயவு செய்து இந்த படத்தைப் பாருங்கள் II. நான் நாளை வருவேன்

12) I. அப்பி கமு
II. (அ) அண்ணா கடைக்குப் போனார் (ஆ) நான் பாடம் படிக்கிறேன்

13) முள்முருக்கு
14) ஆடி மாதம்
15) தேயிலை
16) லில்லிப்பூ
17) எருக்கலை
18) கறிமிளகாய்
19) அந்துப்பூச்சி
20) ஈ
21) முயல்
22) ஆந்தை
23) 4
24) கார்த்திகை
25) ரிஷபம்
26) மலேசியா
27) முஸ்லிம் மக்கள்
28) தன்னிறைவு
29) இரத்தினபுரி
30) அனோபிலிஸ் பெண் நுளம்பு
31) உடலைத் தளர்த்துதல்
32) 2
33) கறுப்பு
34) 3
35) லக்ஸபான நீர்வீழ்ச்சி
36) அபய வாவி
37) நொருங்கக்கூடியது
38) கொழும்பு
39) தேசியக்கொடி ஏற்றுதல்
40) சமாதானம்
41) 3
42) I. 7320 II. 2037
43) 3160
44) 2463
45) 104
46) 2
47) 303
48) 24m
49) 26m
50) I. 8 II. 2
51) 9 ரூபாய் 50 சதம்
52) 11kg 800g
53) I. 12 II. 


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை கேலிச்சித்திரமாக சித்தரிக்கும் ஃபேஸ்புக் எப்ளிகேஷன்




ஃபேஸ்புக்கில் இருக்கும் எப்ளிகேஷன் களில் உங்களது கேலிச்சித்திரப் படங் களை (கார்ட்டூன்) வடிவமைப்பதற்காகவே, ஒரு சிறப்பான எப்ளிகேஷன் உள்ளது. Bitstrips என்ற இந்த எப்ளிகேஷன், தற்போதளவில் மிகவும் பிரபலமாகி உள்ளது. கேலிச்சித்திரங் களாக மட்டுமல்லாது, வாழ்த்து அட்டைகள் கூட (Greeting Card) இங்கு கிடைக்கின்றன.

இதற்காக https://apps.facebook.com/bitstrips/ என்ற இணையத்தள முகவரிக்குச் செல்லவும். பின்னர் அதில் உள்ள Get Started by designing your Avatar என்ற பொத்தானை அழுத்தி, அடுத்த பக்கத்திற்குச் செல்லவும். இங்கு சென்றால் உங்கள் விபரங்கள் குறித்து பல்வேறு கேள்விகள் கேட்கப்படும். உதாரணமாக: உங்கள் முக அமைப்பு எப்படியிருக்கும் என்ற கேள்விகளுக்கு, உங்கள் முகத்தின் கலர் மற்றும் வடிவமைப்பு போன்றவற்றிற்கேற்ப அங்குள்ள படங்கள் மூலமே பதிலளிக்கலாம். அத்துடன், நீங்கள் உயரமானவரா? அல்லது உயரம் குறைந்தவரா? என்பதை உரிய பகுதியில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.






மேலும், நீங்கள் எடை குறைந்தவரா? அல்லது உடல் எடை அதிகம் உடையவரா? என்பதையும் உரிய பகுதியில் குறிப்பிட வேண்டும். நீங்கள் உடையணியும் முறையைக் கூட இங்கே குறிப்பிடலாம். அனைத்து செயல்களும் முடிந்தவுடன், உங்களுடைய கார்ட்டூன் மற்றும் அது தொடர்பான பல படங்களை இந்த எப்ளிகேஷன் தானாகவே வடிவமைத்துத் தரும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விஜய் நுட்பம்



# கணினி விளையாட்டுக்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள நவீன சாதனங்கள்



கணினி உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் Logitech நிறுவனம் ஆனது, கணினி விளையாட்டிற்குப் பயன்படும் விதத்திலான அதிநவீன விசைப்பலகை (Keyboard), சுட்டி (Mouse) மற்றும் ஹெட்செட் போன்ற சாதனங்களை அறிமுகம் செய்துள்ளது.

'Logitech G' எனும் தொடர் நாமங்களோடு G100s, G400s, G700s ஆகிய பெயர்களில் சுட்டிகளையும் G510s, G19s ஆகிய பெயர்களில் விசைப்பலகைகளையும் G430 என்ற பெயரில் ஹெட்செட்டையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சாதனங்கள் கணினி விளையாட்டுகளை இலகுவாக கையாளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.


G100s சுட்டியானது 39 டொலர்களுக்கும் G400s சுட்டி 59 டொலர்களுக்கும் G500s சுட்டி 69 டொலர்களுக்கும் G700s சுட்டி 99 டொலர்களுக்கும் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன.






அத்துடன், G510s விசைப்பலகையானது 119 டொலர்கள், G19s விசைப்பலகையானது 199 டொலர்கள், 7.1 Surround Sound தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட G430 ஹெட்செட் ஆனது 79 டொலர்கள் ஆகிய பெறுமதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# GEM10313s கைக்கணினி



இங்கிலாந்திலுள்ள இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமான Gemini நிறுவனமானது, Android இயங்குதளத்தினைக் கொண்ட புதிய கைக்கணினி (tablet) ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

'GEM10313s' என்ற தொடரிலக்கத்துடன் அறிமுகமாகும் இந்த கைக்கணினி ஆனது, 9.7 அங்குல தொடுதிரையினை உள்ளடக்கியதுடன், கூகிளின் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தில் செயற்படக்கூடியவாறும் காணப்படுகின்றது.

தவிர, 1.5 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய ARM Cortex RK Processor மற்றும் பிரதான நினைவகமாக 1GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் போன்றவற்றையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந் நினைவகத்தினை microSD கார்ட்களின் உதவியுடன் 32 GB வரை அதிகரிக்கவும் முடியும்.

மேலும், 2 மெகாபிக்சல் மற்றும் 0.3 மெகாபிக்சல் உடைய கெமராக்களையும் கொண்டுள்ளது. இந்த கைக்கணினி 150 யூரோக்கள் பெறுமதியுடையவை என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.



# மடிக்கணினி மின்கலத்தின் பாவனைக்காலத்தை அதிகரிக்க...

மடிக்கணினியில் பாவிக்கப்படும் மின்கலங்களை (Battery) தொடர்ச்சியாக சார்ஜ் செய்யாமல் மடிக்கணினியைப் பயன்படுத்துதல் மற்றும் மின்கலத்தை சரியான முறையில் சார்ஜ் செய்யாமல் இருத்தல் போன்ற காரணங்களால் மடிக்கணினி மின்கலங்கள் விரைவில் பழுதடையக்கூடிய நிலையை எதிர்கொள்கின்றன.

எனவே, இத்தகைய அசௌகரியங்களைத் தவிர்த்து, நேரத்திற்கு நேரம் மின்கலம் தொடர் பான தகவல்களைத் தந்து, அவற்றின் பாவனைக் காலத்தை நீடிக்கச் செய்யும் பொருட்டு 'Battery Optimizer' எனும் மென்பொருள் அறிமுகமாகியுள்ளது.






விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இம்மென்பொருளானது, மடிக்கணினியின் மின்கலம் முழுமையாக சார்ஜ் அடைந்த பின்னரும் சார்ஜ் அற்ற நிலையிலும் Alarm மூலம் அதுபற்றித் தெரியப்படுத்துவதுடன், மின்கலங்களில் காணப்படக்கூடிய ஏனைய கோளாறுகள் தொடர்பான தகவல்களையும் உடனுக்குடன் தரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# மடித்து எடுத்துச் செல்லக்கூடிய ஸ்கூட்டர்



'இடநெருக்கடி' இன்று உலகம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக, பல்வேறு துறைகளில் பல்வேறு நுட்பங்களும் வழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வாகன உற்பத்தியிலும் இது தாக்கம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய, இடநெருக்கடியை சமாளிக்கும் வகையில் வாகனங்கள் வடிவமைக்கப்பட்டு வருவதுடன், வாகனத் தரிப்பிட வசதிகள் நிலத்துக்கு கீழும் பல மாடிகளுக்கு மேலும் அமைக்கப்பட்டு வருகின்றன.







இதனடிப்படையில், இடநெருக்கடிக்குத் தீர்வுகாணும் விதத்தில் புதிய மோட்டார் ஸ்கூட்டர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மணிக்கு 28 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட்டிச்செல்லக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்கூட்டர், 55 பவுண்ட்கள் எடை கொண்டுள்ளது.



மின்கலத்தில் ஓடக்கூடிய இதன் சிறப்பு அம்சம் என்னவென்றால்... இந்த ஸ்கூட்டரை நீங்கள் எங்கேயும் தரித்து நிறுத்திவைக்க வேண்டிய தேவை இல்லை. மாறாக, நீங்கள் இதில் பயணித்த பின்னர், இதனை கையில் மடித்து எடுத்து செல்லலாம் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# All-In-One PC



ECS நிறுவனமானது, அதிநவீன All-In-One PC எனும் கணினியை அறிமுகப்படுத்தியுள்ளது. 'G24' எனும் தொடரிலக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இக்கணினியானது, விண்டோஸ் 8 இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாகக் காணப்படுகின்றது.

மெலிவான அமைப்புடைய இக்கணினியில், Mini-ITX Motherboard இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் காணப்படும் 23.6 அங்குல அளவுடைய தொடுதிரையில், ஒரே நேரத்தில் பத்து விரல்களையும் பயன்படுத்தி கையாளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.



## கூகிள் வழங்கும் அரிய வாய்ப்பு:

## கூகிள் தேடுபொறியில் உங்களுக்குப் பிடித்த புகைப்படத்தை நிறுவலாம்

கூகிள் தேடு பொறியில் உங்களுக்குப் பிடித்த புகைப்படத்தை நிறுவக்கூடிய வகையிலான ஓர் அரிய வாய்ப்பை கூகிள் அளித்துள்ளது. இதற்கு நீங்கள் கூகிள் க்ரோம் உலாவியை (Browser) பயன்படுத்த வேண்டும்.

இதன்மூலம் கூகிள் home page இன் பின்பக்கத் திரையை மாற்றி, உங்களுக்குப் பிடித்தமான அழகிய படத்தை நிறுவிக்கொள்ள முடியும்.

அதற்கு நீங்கள் முதலில் கூகிள் க்ரோம் நீட்சியை (Extension) உங்களுடைய கணினியின் உலாவியில் (Browser) நிறுவ வேண்டும்.


இதை நிறுவ கூகிள் க்ரோம் நீட்சி பக்கத்திற்கு சென்று அதை install செய்ய வேண்டும்.
















# Google earth சேவை மேம்படுத்தப்பட்டுள்ளது


இணையத்தள வளர்ச்சியின் காரணமாக, மொத்த உலகத்தையும் ஒரு கணினிக்குள் கொண்டுவந்து சாதனை படைத்த கூகிளின் 'Google earth' சேவை, தற்போது புதிய அம்சங்கள் பலவற்றை உள்ளடக்கியதாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர் காணப்பட்ட செய்மதி படங்களுடன், மேலும் 100,000 வரையான பிரபலமான இடங்களின் செய்மதிப் படங்களை உள்ளடக்கிய நிலையில், தற்போது மொத்தம் 200 வரையான நாடுகளின் நகரங்கள் மற்றும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் செய்மதிப் படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச்சேவையானது, desktop கணினிகள் அனைத்திலும் பயன்படுத்தக்கூடியதாக காணப்படுவதுடன், iOS மற்றும் Android இயங்குதளங்களைக்கொண்ட சாதனங்களிலும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 2013, ஏப்ரல், 03, புதன்கிழமை V





# சதுரங்கம் விளையாடுவோமா...?



நம்முடைய மூளைக்கு வேலை கொடுக்கக் கூடியதும் சிந்தனையைத் தூண்டக்கூடியதுமான ஒரு விளையாட்டாக 'சதுரங்கம்' (Chess) விளையாட்டைக் குறிப்பிடலாம். 'அரசர்களின் விளையாட்டு' என வர்ணிக்கப்படும் சதுரங்கம், இருவர் விளையாடும் ஒரு பலகை விளையாட்டு ஆகும்.

ஒரு பக்கத்துக்கு 16 காய்கள் வீதம், 32 காய்கள் இவ்விளையாட்டில் பயன்படுகின்றன. அவை பொதுவாகக் கறுப்பு, வெள்ளை நிறங்களில் மாறி மாறி அமைந்திருக்கும். சதுரங்கம் அதிர்ஷ்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளையாட்டன்று; மாறாக, மதியூகமும் தந்திரமும் இவ்விளையாட்டுக்கு முக்கியமானதாகும்.

இது ஒரு விளையாட்டாக மட்டுமன்றி, ஒரு கலையாகவும் அறிவியலாகவும் கூட வர்ணிக்கப்படுவதுண்டு. சிலர் இதனை 'மூளை சார்ந்த போர்க்கலை' என்றும் வர்ணிப்பதுண்டு. சதுரங்க விளையாட்டு பொழுதுபோக்கிற்காகவும் போட்டியாகவும் விளையாடப்படுவதுண்டு. பல விதமான சதுரங்க விளையாட்டுக்களும் அதனுடன் தொடர்புடைய விளையாட்டுக்களும் உலகெங்கிலும் விளையாடப்படுகின்றன.










சதுரங்கத்தின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும், ஏழாம் நூற்றாண்டு அளவில் இந்தியாவில் விளையாடப்பட்டு வந்த சதுரங்கம் என்னும் விளையாட்டிலிருந்தே, இது வளர்ச்சியடைந்தது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக இருக்கின்றது.

எவ்வாறாயினும், இந்த விளையாட்டை எப்படி விளையாட வேண்டும் என்பது பலருக்கும் தெரியாமல் இருக்கலாம். எனவே, இந்த விளையாட்டை எப்படி விளையாட வேண்டும் என்பதை அனைவருக்கும் புரியும் வகையில் வீடியோவுடன் தெளிவுபடுத்தும் ஓர் இணையத் தளம் இருக்கின்றது. குறிப்பாக, தமது பிள்ளைகளுக்கு சதுரங்கம் கற்பிக்க விரும்புகின்றவர்களுக்கு இது பேருதவி புரிவதாக அமையும். ஏனெனில், சதுரங்கம் தொடர்பான அனைத்து விபரங்களையும் இத்தளம் கொண்டுள்ளமையாகும்.

இந்த தளத்தினூடாக, பிள்ளைகள் சதுரங்க விளையாட்டின் அடிப்படை பயிற்சியையும் அதற்கான விதிமுறைகளையும் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். அத்துடன் பெற்றோர், பிள்ளைகள் மற்றும் சதுரங்க பயிற்றுவிப்பாளர்கள் என மூன்று தரப்பினரும் எப்படி திறமையாக விளையாடி வெல்லலாம் என்பதை இந்த தளம் வீடியோவுடன் காட்டுகிறது.

இத்தளத்திற்கு சென்று இலவச பயனாளர் கணக்கு ஒன்றை உருவாக்கிக்கொண்டு நேரடியாக சதுரங்கம் விளையாடலாம். நமக்கு நேரம் கிடைக்கும்போது, இத்தளத்திற்கு சென்று நம் பயனாளர் கணக்கைக் கொடுத்து, விட்ட இடத்தில் இருந்து மறுபடியும் ஆரம்பிக்கலாம். அத்துடன், இதுவரை நீங்கள் சதுரங்கம் விளையாடிப் பெற்ற மதிப்பெண்கள் எத்தனை என்பது உட்பட, அத்தனையையுமே இந்த தளம் உங்களுக்கு காட்டுகிறது. ஒவ்வொரு நாளும் புதிதாக வெற்றி பெற்றவர்களின் வீடியோக்களையும் நாம் இத்தளத்தில் காணலாம்.

ஆக, சதுரங்க விளையாட்டில் ஆர்வமுள்ள அனைவரும் www.chesskid.com எனும் தளத்திற்கு ஒருமுறை விஜயம் செய்துதான் பாருங்களேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடல் பண்புக்கூறுகள்




✱ தொடர்பாடுபவர் தகவலை முன்வைக்க முன்னர் பெறுநரின் நலன், செய்தியின் பயன், தொடர்பின் விளைவு, தொடர்பு முறை, தொடர்பு ஊடகம், தொடர்புத் திறனை அதிகரிக்கும் நிலைமைகளை நன்கு அறிந்திருக்கவேண்டும்.

✱ ஆளிடைத் தொடர்பில் தொடர்பாடுபவர் அனுப்புந ராகவும், அனுப்புநர் தொடர் பாடுபவராகவும் மாற்றம் பெறுகின்ற நிலைமைகள் உருவாகின்றன.

✱ மக்கள் தொடர்பாடல் செயன்முறையில் செய்தி வெளியிட்டவரே, தொடர்பின் மூலமாக செயற்படு கின்றார்.

✱ தொடர்பாடுப வர் தன்னுடைய செய்தி எவ்வாறு சென்றடைந்துள் ளது என்பதை தெரிந்துகொள்வ தில் ஆர்வமுள்ளவராகக் காணப் படுவர்.

✱ நேரடி மற்றும் தொலைபேசி உரையாடலில் தொடர்பாடுபவருக்கு உடனடி பின்னூட்டல் கிடைக்கப் பெற்று தகவலை தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்து, தொடர்பாடல் செயன்முறையை வலுவுள்ளதாக் கிக்கொள்ள வாய்ப்புள்ளது.

✱ தகவல் வழங்குநர் அதாவது, தொடர்பாடுபவர் என்பவர் செய் தியை வாசகர், நேயர், ரசிகர் ஆகியோருக்கு ஏற்ப வழங்குப வராக இருக்கின்றார்.

✱ ஆரம்பகால சமுதாயத்தில் தொடர்பாடுபவர் (அனுப்புநர்) சைகை, குறியீடு, ஒலி, ஓவியங்கள் மூலம் தொடர்புச் செயன்முறையை முன்னெடுத்தனர். கால மாற்றங் களுக்கு ஏற்ப, தொடர்பாடுபவர் செயன்முறை வகிபங்குகளும் அணுகுமுறைக ளும் மாற்றம் பெறலாயின.




✱ குறித்த செய்தியை அனுப்புபவரின் பண்பும், அதனைச் சொல்லும் முறையும் பெறுநரை கேட்கத்தூண்டும்.

✱ தகவலை தயார் செய்து தொடர்பாடுபவர் முன்வைக்கின்ற போது, அதனைப் பிழையின்றியும் (Accuracy) சுருக்கமாகவும் (Brevity) தெளிவாகவும் (Clarity) முன்வைத் தல் அவசியமானது.

✱ தொடர்பாடுபவர், அறிவிப்பா ளராக, முன்வைப்புனராக தனது வகிபங்கை ஆற்ற முடியும்.

## தொடர்பாடுபவரின் நடத்தைப் பண்புநிலைகள்

✱ உறுதியான நம்பிக்கையும், மனமும் கொண்டவராக செயற்படு வர்.



✱ ஆற்றல், அறிவை விருத்தி செய்வதற்கு தொடர்ச்சியாக கடமைகளில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

✱ விழிப்புணர்வு மிக்கவராக இருப்பர்.

✱ சிறந்த செவிமடுத்தல் திறனும், சிறப்பான விடயங்களை முன்வைக் கும் ஆற்றலும் கொண்டவர்.

✱ உண்மைத் தன்மையுடனும் ரகசியம் காப்பவராகவும் செயற்படுவர்.

✱ சுயமதிப்பீடு, சுய ஒழுங்க மைப்பை மேற்கொள்பவர்.

✱ தவறுகளை ஏற்கும் மனப்பக்குவம் உள்ளவர்.

✱ ஆரோக்கியமான தொடர்பை கட்டியெழுப்புபவர்.

✱ ஊக்கமளிப்பவர், பாராட்டுபவர், நட்புறவு கொண் டவர்.

✱ தெளிவான பேச்சும், உரையாடல் பாங்கும் மிக்கவர்.

✱ எத்தகைய செயற்பாட்டி லும் நன்மையான அம்சங் களையே இனங்கண்டு கொள் பவர்.

✱ சூழ்நிலைக்கு ஏற்ப தொடர்பாடல் செயன் முறையை கட்டியெழுப்பும் ஆற்றல் மிக்கவர்.

✱ தொடர்பாடுபவர் பெறுநருடன் சிறந்த இடைத்தொடர்பை உருவாக்கிக் கொள்ளும் தன்மை உள்ளவர்.

✱ நேர்முறையிலான (Positive way) தொடர்பைக் கட்டியெழுப் புபவர். (தொடரும்)


**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில், இந்துக் கல்லூரி.

## தனிகரம்


எண்களின் வரிசைப்படி புள்ளிகளை இணைத்து முழு உருவையும் காண்க.




எழுத்துக்களில் தரப்பட்டுள்ள நிறங்களை படத்திற்குப் பொருத்தமாக தீட்டுக.




இந்த முதலை உருவத்தின் உண்மையான நிழல் உரு எது என்பதைக் கண்டறிக.




தனியே தரப்பட்டுள்ள துண்டுப் பகுதிகளை பெரிய படத்தின் விடுபட்டுள்ள இடங்களில் சரியாகப் பொருத்துக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் கமல் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் உரையாடலை நோக்குவோம்.

**කමල්:** **ආයුබෝවන් මහත්මයා.**
ஆயுபோவன் மஹத்மயா.
கமல்: **வணக்கம் ஐயா.**

**අධ්‍යක්ෂ:** **ආයුබෝවන්, වාඩිවෙන්න. ඔයාගේ නම මොකද්ද?**
ஆயுபோவன், வாடிவென்ன. ஓயாகே நம மொகத்த?
பணிப்பாளர்: **வணக்கம், உட்காருங்கள்.**
**உங்களுடைய பெயர் என்ன?**

**කමල්:** **මගේ නම කමල්.**
மகே நம கமல்.
கமல்: **என்னுடைய பெயர் கமல்.**

**අධ්‍යක්ෂ:** **ඔයාගේ හැඳුනුම්පත දෙන්න.**
ஒயாகே ஹெந்துனும்பத தென்ன.
பணிப்பாளர்: **உங்களுடைய அடையாள அட்டையைத் தாருங்கள்.**

**කැඳවීමේ ලිපිය ගෙනාවද?**
கெந்தவீமே லிபிய கெனாவத?
**அழைப்புக் கடிதம் கொண்டுவந்தீர்களா?**

**කමල්:** **ඔව් මහත්මයා, මෙන්න.**
ஒவ் மஹத்மயா, மென்ன.
கமல்: **ஆம் ஐயா, இந்தாருங்கள்.**

**අධ්‍යක්ෂ:** **ඔයාගේ නමට කෙළින් අත්සන් කරන්න.**
ஒயாகே நமட்ட கெளின் அத்சன் கறன்ன.
பணிப்பாளர்: **உங்கள் பெயருக்கு நேரே கையொப்பமிடுங்கள்.**

**කමල්:** **හොඳයි මහත්මයා.**
ஹொந்தய் மஹத்மயா.
கமல்: **நல்லது ஐயா.**

**අධ්‍යක්ෂ:** **ඔයාගේ උප්පැන්න සහතිකය තියෙනවාද?**
ஒயாகே உப்பென்ன சஹதிகய தியெனவாத?
பணிப்பாளர்: **உங்களுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இருக்கிறதா?**

**කමල්:** **ඔව් මහත්මයා, මෙන්න.**
ஒவ் மஹத்மயா, மென்ன.
கமல்: **ஆம் ஐயா, இதோ.**

### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக**

1. ඔයාගේ .................. මොකද්ද?
2. .................. හැඳුනුම්පත දෙන්න.
3. උප්පැන්න සහතිකය ..................

**சிங்களத்தில் மொழிபெயர்க்க**

1. வணக்கம் ஐயா.
..............................................
2. என்னுடைய பெயர் கமல்.
..............................................
3. நல்லது ஐயா.
..............................................




**Have gone** மற்றும் **Has gone** முதலான கூட்டு வினைச் சொற்களைக் (Compound Verbs) கையாண்டு அமைக்கப்படுகின்ற, நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களை, நடைமுறையில் பயன்படுத்துகின்றபோது, அவை எவ்வாறு அர்த்தம் கொள்ளப்படுகின்றன என்பதை, பின்வரும் உரையாடல் வாக்கியங்கள் மூலம் புரிந்துகொள்ளலாம்.

(அ) உனது சகோதரன் எங்கே இருக்கின்றான்?
Where is your brother?

(ஆ) அவன் இப்போது கொழும்பில்தான் இருக்கின்றானா?
Is he in Colombo now?

(இ) அவன் எங்கேயாவது போய்விட்டானா?
Has he gone anywhere?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(ஈ) அவன் எங்கே போயுள்ளான்?
Where has he gone?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(அ) ரஞ்ஜித் எங்கே இருக்கின்றான்?
Where is Ranjith?

(ஆ) அவன் இப்போது வகுப்பில்தான் இருக்கின்றானா?
Is he in the class now?

(இ) அவன் வீட்டுக்குப் போய்விட்டானா?
Has he gone home?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(அ) அந்தச் சிறுவர்கள் எங்கே இருக்கின்றனர்?
Where are the children?

(ஆ) அவர்கள் தோட்டத்தில்தான் இருக்கின்றார்களா?
Are they in the garden?

(இ) அவர்கள் எங்கே போயுள்ளார்கள்?
Where have they gone?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(ஈ) அவர்கள் வெளியே போய்விட்டார்களா?
Have they gone out?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(உ) ஆம், அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.
Yes, they have gone home.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(அ) அந்த பையன்கள் எங்கே இருக்கின்றார்கள்?
Where are the boys?

(ஆ) அவர்கள் வகுப்பில்தான் இருக்கின்றார்களா?
Are they in the class?

(இ) அவர்கள் எங்கேயாவது போய்விட்டார்களா?
Have they gone anywhere?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(ஈ) ஆம், அவர்கள் சிற்றுண்டிச்சாலைக்குப் போயுள்ளார்கள்.
Yes, they have gone to the canteen.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சல்



Aedes aegypti mosquito





ஆர்போ வைரசினால் (Arbo Virus) டெங்குக் காய்ச்சல் ஏற்படுகின்றது. ஈடிஸ் வகையைச் சார்ந்த சில நுளம்புகளே, டெங்கு நோய்க் காவிகளாகக் காணப்படுகின்றன. ஈடிஸ் நுளம்புகள் பருமனில் சிறியவை. அவற்றின் உடல் கறுப்பு நிறமானது; கால்களிலும் வயிற்றுப்பகுதியிலும் வெள்ளை நிறக் கோடுகளைக் காணமுடியும். இரு வகையான ஈடிஸ் நோய்க்காவி நுளம்புகள் (Aedes egiptii, Aedes albopictus) மூலம் இந்நோய்க்குக் காரணமான Virus குருதியினுள் செல்லுத்தப்படுகின்றது. இதனால், மனிதனுக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்படுகின்றது.

எம். பாத்திமா அப்லா,
அந்நூர் மத்.கல்., பாணகமுவ.


# வேலை



*வேலை நல்ல வேலை*
*திறமையான வேலை*
*தோட்டத்தில் விவசாயி*
*அதை விற்க ஒரு முதலாளி*
*பள்ளியில் மாணவர்கள்*
*கற்பிக்க நல்ல ஆசிரியர்கள்*
*மர வேலைக்கு தச்சன்*
*வீடு கட்ட மேசன்*
*வேலையிலும் பலவகை*
*அரச வேலை, தனியார்*
*வேலை, சுயவேலை*
*வேலை நல்ல வேலை!*

ஆர்.தனுஷன்,
பண்டாரவளை த.மத்.கல்.,
பண்டாரவளை.

# ஓவியர்-பப்லோ பிக்காஸோ




உலகில் மிகச் சிறந்த ஓவியர் எனப் புகழப்படும் பிக்காஸோ 1881 இல் ஸ்பெயின் நாட்டில் பிறந்தார். இவர் ஒரு புதிய பாணியை ஓவியத்துறையில் புகுத்தினார். அது அப்ஸ்ட்ராக்ட் ஆர்ட் (Abstract Art) என்று அழைக்கப்பட்டது. இம்முறையைப் பின்பற்றி உலகம் முழுவதும் பல ஓவியர்கள் தோன்றினார்கள்.

இவர், பெரிஸ் நகரத்தில் தங்கித் தமது பணிகளைச் செய்து வந்தார். பின்னர் 'க்யூபிஸம்' என்ற ஒரு புதுப்பாணியை உருவாக்கினார். இந்த ஓவிய முறையானது, முப்பரிமாணத்தில் பொருட்களைக் காட்டியது. அனைவருமே இவரது ஓவியங்களைப் புரிந்துகொண்டு பாராட்டுவதில்லை. எனினும், அவரவர் ரசனைக்கேற்றவாறு, தலைசிறந்த ஓவியர்களால் அவர் பாராட்டுப் பெற்றிருப்பதும் அவரது ஓவியங்கள் மிக உயர்ந்த விலைக்கு விற்கப்படுவதும் அவரது சிறப்புக்குச் சான்றாக விளங்கின. பல சிறப்புக்களைப் பெற்ற இவர், 1972 இல் தமது 91 ஆவது வயதில் காலமானார்.

எச்.எம்.அஸ்லம்,
ஒட்டமாவடி.

# யாருக்குப் பொறுப்பு

ஒரு கிராமத்தில் ஒரு வயோதிபர் இருந்தார். அவருடைய பெயர் ராமசாமி. ராமசாமிக்கு இரு மகன்மார்கள் இருந்தனர். மூத்தவனுடைய பெயர் ராஜன். அவன் நேர்மையும் நல்ல பழக்கவழக்கங்களையும் கொண்டவன். இளையவனுடைய பெயர் குமரன். அவன் சிறிதும் பொறுப்பில்லாத ஊதாரி.



ஒருநாள் ராமசாமி அவரது மூத்த மகனை அழைத்து, "நீ கடைக்குப் போய் பத்து மாங்கனிகளை வாங்கி வா" என்று கூறினார். அதற்கு அங்கே வந்த இளைய மகன், "தந்தையே! நீங்கள் எப்போதும் அண்ணனுக்கு மாத்திரம் பொறுப்புகளைக் கொடுக்கிறீர்கள். நானும் உங்கள் மகன் தானே" என்று கூறினான். அதற்கு ராமசாமி, "சரி! நான் இருவருக்கும் ஒரு வேலையைத் தருகிறேன். அதனை யார் சரியாகச் செய்கிறீர்கள் என்று பார்க்கலாம்" என்று கூறி "நீங்கள் இருவரும் கடைக்குப் போய் மாங்கனிகளை வாங்கி வாருங்கள்" என்று கூறினார். இருவரும் கடைக்குப் போனார்கள். சிறிது நேரத்தின் பின்னர் இருவரும் மாங்கனிகளை வாங்கி வந்தார்கள். ராஜன் பழுதற்ற, சுவையான பெரிய மாங்கனிகளை வாங்கிவந்தான். ஆனால், குமரன் பழுக்காத சுவையற்ற சிறிய மாங்காய்களை வாங்கி வந்தான். "குமரன்! நீ வாங்கிவந்த மாம்பழத்தைப் பார்த்தாயா? யாராலும் உண்ணவே முடியாது. ஆனால், உனது அண்ணன் வாங்கிவந்த மாம்பழங்களைப் பார், எவ்வளவு நல்ல மாம்பழங்கள். இந்த சிறிய வேலையைக்கூட உன்னால் சரியாகச் செய்யமுடியவில்லையே. அதனால்தான் நான் எல்லாப் பொறுப்புகளையும் ராஜனுக்குக் கொடுக்கிறேன்" என்றார். குமரனும் தனது பிழையை திருத்திக்கொள்வதாகக் கூறி தந்தையிடம் மன்னிப்புக் கேட்டான்.

கே.எஸ்.சுஜன்,
ஹில்பர்ன் சர்வதேச பாடசாலை.




# உங்களுக்குத் தெரியுமா?

- கடல் நீரின் மேற்பரப்பிலுள்ள பூச்சியினங்கள் சிலவற்றைத்தவிர, கடலினுள்ளே எவ்வித பூச்சியினங்களும் காணப்படுவதில்லை.
- மீன்களை கசியிழைய மீன்கள், என்பு மீன்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.
- பக்ற்றீரியாக்கள் பிளவுமுறை மூலம் இனப்பெருக்கமடைகின்றன.
- பசுபிக் சமுத்திரத்தில் 'Kelp' என்னும் அல்கா இனம் 100m நீளம் வரை வளரக்கூடியது.
- பக்ற்றீரியாக்களிலும், முலையூட்டிகளின் செங்குழியங்களிலும் கரு காணப்படமாட்டாது.

பாத்திமா சம்ஹா,
பொலன்னறுவை மு.மத்.கல்., பொலன்னறுவை.

# கோள்களைப் பற்றி....



1. ஞாயிற்றுத் தொகுதியில் மிகப் பெரிய கோள் எது?
   வியாழன்
2. புவியின் துணைக்கோள் எது?
   சந்திரன்
3. பூமிக்கு அண்மையில் உள்ள கோள் எது?
   புதன்
4. செங்கோள் எனப்படும் கோள் எது?
   செவ்வாய்
5. சந்திரகிரகணம் தோன்றும் நாள் எது?
   பௌர்ணமி

எம்.என்.எம்.அம்ஜத்,
அல்-அக்ஷா மு.ம.வித்., எகலியகொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வெளிச்சவீடுகள்

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலிருந்தே, எமது நாட்டின் வெளிச்சவீடுகளின் வரலாறு ஆரம்பமாகின்றது. இம்பீரியல் வெளிச்சவீடு சேவையின்கீழ் ஆரம்பகாலங்களில் வெளிச்சவீடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இன்று 26 வெளிச்சவீடுகள் இலங்கையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. 1976 ஆம் ஆண்டின் பின்னர் வெளிச்சவீடுகள் இலங்கை கடற்படையின் பொறுப்பின்கீழ் வந்துள்ளது. தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையினதும், இலங்கை கடற்படையினதும் பொறுப்பின்கீழ் வெளிச்சவீடுகள் உள்ளன. ஆயினும், இன்று 14 வெளிச்சவீடுகள் மட்டுமே சிறந்த இயங்குநிலையில் உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

### கோவிலான் பொயின்ட் வெளிச்சவீடு



1916 இல் நிர்மாணிக்கப்பட்ட இந்த வெளிச்சவீடு, 30 மீற்றர் உயரம் கொண்டது. உருளை வடிவம் கொண்ட இந்த வெளிச்சவீடு கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திற்கு வடமேல் காரைதீவு தீவில் அமைந்துள்ளது. தற்போது இது இயங்கு நிலையில் இல்லை.

### பருத்தித்துறை வெளிச்சவீடு



1916 இல் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் இந்த வெளிச்சவீடு, 32 மீற்றர் உயரமானது. 3 செக்கன்களுக்கு ஒரு தடவை வெந்நிற ஒளியைப் பாய்ச்சும் இது, காங்கேசன்துறைக்கு கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது.

### மட்டக்களப்பு வெளிச்சவீடு



1913 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வெளிச்சவீடு, தற்போதும் இயங்கு நிலையில் உள்ளது. 28 மீற்றர் உயரம் கொண்ட இது, 3 செக்கன்களுக்கு ஒருமுறை வெளிச்சத்தைப் பாய்ச்சுகின்றது.



### சிறிய ராவணா வெளிச்சவீடு (Little Basses Reef)

இது 1878 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 10 செக்கன்களுக்குள் வெந்நிற வெளிச்சக் கீற்றுகள் இரண்டு வெளியாகின்றன. 37 மீற்றர் உயரம் கொண்டது. யாலவுக்கு 10 கி.மீற்றர் தொலைவில் கடல் நோக்கியும் குமணவுக்கு 16 கி.மீற்றர் தெற்கு நோக்கியும் அமைந்துள்ளது. இது இயங்கு நிலையில் உள்ள வெளிச்சவீடாகும்.

### மகா வெளிச்சவீடு (Great Basses Reef)



1873 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள மகா ராவணா வெளிச்சவீடு, 37 மீற்றர் உயரம் கொண்டது. தரையிலிருந்து 10 கி.மீற்றர் தூரத்திலும் கிரிந்தவுக்கு 10 கி.மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளது. தற்போதும் இயங்கு நிலையில் உள்ளது.



### ஹம்பாந்தோட்டை வெளிச்சவீடு

1903 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹம்பாந்தோட்டை வெளிச்சவீடு, 14 மீற்றர் உயரம் கொண்டது. 1970 களில் இயங்கு நிலையில் இருந்த இந்த வெளிச்சவீடு தற்போது இயங்குவதில்லை.

### காலி வெளிச்சவீடு (Point de Galle)



1848 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வெளிச்சவீடு, நாட்டின் மிகவும் பழைமை வாய்ந்த வெளிச்சவீடாகக் கருதப்படுகின்றது. இது காலி அரணுக்குள் அமைந்துள்ளது. 1936 இல் தீக்கிரையான இந்த வெளிச்சவீட்டை 1939 இல் புதிதாக மீள் நிர்மாணம் செய்துள்ளனர். 25.5 மீற்றர் உயரம் கொண்டது. 15 செக்கன்களுக்கு ஒருமுறை இரண்டு வெந்நிற ஒளிக்கற்றைகளைப் பாய்ச்சக்கூடியது.



### பேருவளை வெளிச்சவீடு (Barberyn Light House)

1890 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள பேருவளை வெளிச்சவீடு, 34 மீற்றர் உயரமானது. 10 செக்கன்களுக்கு ஒரு தடவை வெந்நிற ஒளியைப் பாய்ச்சுகின்றது.

### கொழும்பு-02 வெளிச்சவீடு (Clock Tower)



1860 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வெளிச்சவீடு, 29 மீற்றர் உயரம் கொண்டது. 1857 இல் மணிக்கூட்டுக் கோபுரமாக அமைக்கப்பட்டுள்ள இது, 1860 இல் விளக்குகளைப் பொருத்தி வெளிச்சவீடாக மாற்றப்பட்டுள்ளது. செத்தம் வீதி மற்றும் ஜனாதிபதி மாவத்தைக்கு அண்மையில் அமைந்துள்ளது. தற்போது இந்த வெளிச்சவீடு இயங்குநிலையில் இல்லை.




### கோல்ஃபேஸ் வெளிச்சவீடு (Galbokka Point)

கொழும்பு 03 என்றும் Galbokka Point என்றும் அழைக்கப்படும் இந்த வெளிச்சவீடு, 1952 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போதும் இயங்குநிலையில் உள்ளது. இது 10 செக்கன்களுக்கு ஒரு தடவை வெந்நிற ஒளிக்கற்றைகள் மூன்றை வெளியிடுகின்றது. 15 மீற்றர் உயரமானது. கொழும்பு துறைமுகத்தின் தென்கோடியில் கல்பொக்க என்ற பிரதேசத்தில் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக

3









தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.04.10 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 411
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


1


இங்குள்ள உருக்களை சோடியாக வகைப்படுத்தினால், எஞ்சும் உருவில் வட்டமிடுங்கள்



## ரோமன் இலக்கத்தில் தருக 5

1. 5 - ..................................
2. 47 - ..................................
3. 1009 - ..................................
4. 304 - ..................................
5. 93 - ..................................

## இடைவெளிகளை நிரப்புக 2




## குறுக்கெழுத்துப் போட்டி இல. 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | |
| | ■ | | ■ | | 4 |
| 5 | | | | ■ | ■ |
| | ■ | 6 | 7 | | ■ |
| | ■ | | ■ | ■ | 8 |
| ■ | ■ | ■ | 9 | | |

### மேலிருந்து கீழ்

01. பலவந்தமாக பறித்தெடுத்தல்.
02. இந்துக்கள் இது பார்த்தே நற்காரியங்கள் செய்வர்.
03. இது அறுபத்தி நான்கு ஆகும்.
04. 'தனது'. (தலைகீழ்)
07. கடலுக்கு உண்டு. (தலைகீழ்)
08. படி.

### இடமிருந்து வலம்

01. சாஸ்திரம் பார்க்க இந்த நூல் அவசியம்.
04. எண்சாண் உடம்புக்கு இதுவே பிரதானம். (மாறியுள்ளது)
05. அஞ்சல் அனுப்புவதற்காக கடித உறையில் ஒட்டப்படுவது.
06. விதம்.
09. கூவும் பறவை.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 26 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | ரு | ப் | 2 ப | ட் | டி |
| 3 ம | 4 தி | ■ | ப் | ■ | ட் |
| ல | ■ | ■ | 5 பா | ப் | 6 பா |
| ம் | 7 ம | ம் | 8 சீ | ■ | ■ |
| ■ | லை | 9 த | ■ | ■ | 10 ம |
| ■ | ■ | 11 பா | ரா | ட் | டு |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 408 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
என்.நுஸ்கி, ஹ~லங்காபொல, ஹக்கல.

**போட்டி: 02**
அப்துல் முஹிஸ், 2 ஆம் குறுக்குத் தெரு, புத்தளம்.

**போட்டி: 03**
மிதா ஃபாரூக், கஹடோவிட்ட, வெயன்கொட.

**போட்டி: 04**
வி.அஜீத், கோப்பாய், யாழ்ப்பாணம்.

**போட்டி: 05**
மெ.மரியமிதுரா, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

**பாராட்டுப் பெறுவோர்:**


- ஆர்.கிறிஸ்தோபர், அக்கரப்பத்தனை.
- எஃப்.ருக்ஷானா, ஹக்மன.
- ஏ.அஸாரா, கெங்கல்ல.
- த.நிதர்சனா, பண்ணாகம்.
- ச.குமணன், உடுப்பிட்டி.
- எம்.யூனிஸ், மாவனல்லை.
- எஃப்.நதா, திஹாரிய.
- த.பிரவீனன், கொட்டகமுவ.
- சி.கதம்பவி, சாவகச்சேரி.
- எச்.அத்னான், கொட்டராமுல்ல.

## சரியான சொல்லில் கோடிடுக 4

1. புத்தக்கம்/புத்தகம்/புஸ்தகம்
2. திரைசீலை/திறைச்சீலை/திரைச்சீலை
3. அம்புளி/அம்புலி/அம்புழி
4. காலனிலை/காலநிலை/காளநிலை
5. பாரம்பரியம்/பாரம்பறியம்/பாறம்பரியம்

## அறிவுக்கு விருந்து - 408 விடைகள்


**போட்டி: 01**



**போட்டி: 02**



**போட்டி: 03**



**போட்டி: 04**

1. தென்னை
2. வடகீழ் மாகாணம்
3. மின்னல்
4. சோறு

**போட்டி: 04**

1. C
2. XX
3. M
4. LXXX
5. DII

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னவ முஸ்லிம் ம.ம. வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள்






விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உருத்திரராசா-கஜந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வன் தனுஷன், தனது ஆறாவது பிறந்தநாளை 05.04.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சகல கலைகளும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



வத்தேகெதர பொல்கெல்லயைச் சேர்ந்த தஸ்லிம்-நசிரா தம்பதியரின் செல்வப் புதல்வி அஸ்மா, தனது ஐந்தாவது பிறந்ததினத்தை 25.03.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: எஃப்.சுமையா)*

*(கொப்பேகனே நிமல் பிரேமச்சந்திர)*

கொப்பேகனே கல்வி வலயத்தைச் சேர்ந்த பன்னவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற 'பீஸ்' இல்லத்தின் தலைவர் என்.எம். இன்சாஃப், நிக்கவரெட்டிய வலயக் கல்வி அலுவலகக் கல்வி அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சலாஹுதீன் அவர்களிடமிருந்து தமக்குரிய வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும் மகளிர் பிரிவில் வெற்றியீட்டிய எம்.ஏ.முஸ்ரினா, வெற்றிக் கிண்ணத்தை கிராம உத்தியோகஸ்தர் எம். நவாஃப் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் கிரிக்கெட்டில் வெற்றியீட்டிய எம்.சீ. முத்ரீஸ், கிண்ணத்தை வர்த்தகர் நஸார் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சலாஹுதீன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.



*(கொப்பேகனே நிருபர்)*

நிக்கவரெட்டிய ரோட்டரிக் கழகமும் கொழும்பு பிட்டவுன் ரோட்டரிக் கழகமும் இணைந்து நிக்கவரெட்டிய முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திற்கென நிர்மாணித்துக் கொடுத்த குடிநீர்த் திட்டத்தை மாணவர்களின் பாவனைக்கு ஒப்படைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. மாவட்டத்தின் முன்னாள் தலைவர் மங்கல குணவர்தன, நிக்கவரெட்டிய ரோட்டரிக் கழகத்தின் தலைவர் சி.பி.தென்னகோன் ஆகியோர் உட்பட, ரோட்டரிக் கழக உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இலங்கையின் பிரசித்தி பெற்ற ஓவியர்கள் சிலர்....



### ஜோர்ஜ் கீட் (1901-1993)

கண்டி நகரில் பிறந்த இவர், திரித்துவக் கல்லூரியில் கற்கும் காலத்தில் 'சிலுவையில் யேசு' என்ற ஓவியத்தை வரைந்து பரிசு பெற்றார். இவரின் ஓவியங்கள் ரேகைகளால் வரையப்பட்டவை. இவரின் நவீன ஓவியங்கள் ஒரே சாயலை வெளிப்படுத்துகின்றன.

1928 இல் இவரால் வரையப்பட்டு சித்திரக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட விக்டோரியா அம்பலம், பெண்ணும் கண்ணாடியும், இளைப்பாறும் பெண், சிவனின் சோகம் ஆகிய ஓவியங்கள் பிரசித்திபெற்றவை. சீகிரியா, எல்லோரா, அஜந்தா ஓவியங்களை ஒத்ததாக இவரின் ஓவியங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.


மேலும், இவரின் ஓவியங்கள் பப்லோ பிக்காசோவின் ஓவியங்களை நினைவூட்டுவதாகவும் கூறப்படுகின்றது. 'எமனை வெற்றி கொள்ளல்' என்ற இவரின் ஓவியம் பிக்காசோவின் 'குவர்ணிகா' ஓவியத்திற்கு ஒப்பிடும்படியாக வரையப்பட்டிருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். ஜோர்ஜ் கீட்டினால் வரையப்பட்ட சில ஓவியங்களை கொழும்பு பொரளை கோதமி விகாரையிலும் காணலாம்.



**எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்**



த.ஜீவித்திரன்,
விக்னேஸ்வரா மகா வித்.,
திருகோணமலை.



இ.றொசாந்தினி,
இ/க/ம/மகா வித்.,
இளவாலை.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



கே.சப்னி அஹமட்,
அல்-அஸ்ஹர் மத்.கல்.,
திஹாரிய.



ஐ.பூர்வஜா,
இரம்பைக்குளம் மகளிர் கல்.,
வவுனியா.



எஸ்.தவதீதன்,
பெரியமடு மகா வித்.,
பெரியமடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறைப்பிடிக்கப்பட்ட ஆங்கில அதிகாரிகள்

கோட்டைக்கு வந்த நோய்வாய்ப்பட்ட படையினர் சகல செய்திகளையும் 'மெடிஜே' எனும் யுத்த கட்டளைத் தளபதிக்குத் தெரிவித்தனர். இதனால், அச்சமடைந்த அவர் தமது நம்பிக்கைக்குரிய படை வீரர்களுடன் அங்கிருந்து தப்பி ஓடினார். இதற்கிடையில் கண்டி இராச்சியத்தின் இரண்டாம் பிரதானி தம்பதெனிய மீது தாக்குதலை நடத்தினான். அங்கிருந்த ஆங்கிலப் படையினர் அத்தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்தனர். எனினும் ஆங்கிலேயர் அங்குள்ள கோட்டையைக் கைவிட்டுப் பின்வாங்கிச் சென்றனர். இதனால், ஆங்கிலப் படைகளை கண்டி இராச் சியத்திற்கு சொந்தமான பிரதேசங் களில் இருந்து விரட்டுவதில் கண்டிப் படைகள் வெற்றி பெற்றன. அங்கு எஞ்சியிருந்தவர்களே, ஆங்கில கட்டளைத் தளபதிகளான டேவி, ஹம்ப்ரி, ரிச்சலி மற்றும் ஒல்லாந்த வைத்தியர் ஒருவர் மாத்திரமே. இறுதியில் ஒல்லாந்த வைத்தியரும் அங்கிருந்து சென்றுவிட்டார்.

யுத்தத்தில் தோல்வியடைந்த டேவி துரதிர்ஷ்டவசமாக சிறை வைக்கப்பட்டார். இதனால், சொல்லொன்னா துயரங்களுக்கு அவர் முகம் கொடுக்க நேர்ந்தது. ஆள்பதி நோத் மற்றும் மெக்டோவல் போன்றோரின் தவறுகளுக்கெல்லாம் அவர் பலிக்கடாவானார். அதுமத்திரமல்ல, போதாக்குறைக்கு அவர் யுத்தக் குற்றவாளி என குற்றம் சாட்டப்பட்டு இங்கிலாந்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதனை நம்பிய அந்நாட்டு மக்கள் சபை டேவியை குற்றவாளியாகவே நடத்தியது. அத்துடன், போரில் வெற்றி பெற்ற கண்டி மன்னரின் படைகள் ஆங்கிலேயரை முழு இலங்கையிலிருந்தும் துரத்தும் நோக்குடன் கரையோரப் பிரதேசங்களை நோக்கி முன்னேறின. இதனால், கரையோரப் பிரதேசங்களில் இருந்த பலர் கண்டி மன்னரின் படையில் இணைந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுநோயை ஏற்படுத்திய 'ஆர்மடில்லோ' விலங்கு

*பேரரசன் மகா அலெக்சாண்டர் ஒருமுறை இந்தியாவை ஆக்கிரமித்திருந்தார். அவ்வேளைகளில் அவரது படைவீரர்கள் 'ஆர்மடில்லோ' (Armadillo) என்ற பாலூட்டி விலங்கைக் கொன்று உட்கொண்டிருந்தனர். தொழுநோயின் நோய்க்கிருமியான மைக்கோ பெக்ற்றீரியம் லெப்ரே (Mycobacterium leprae) எனும் பக்ற்றீரியா மனித உடலினுள் பிரவேசிப்பதற்கு இந்த சம்பவமே காரணமாக அமைந்திருந்தது. அன்றுமுதல் ஆசியாவை மட்டுமன்றி, முழு உலக மக்களையும் இந்த தொழுநோய் தாக்கத் தொடங்கியது. மிகப்பயங்கரமான நோயாகக் கருதப்பட்ட இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். எந்தவித சிகிச்சைகளுமின்றி, அவர்கள் அநாதரவான நிலையில் மரணத்தைத் தழுவினர்.*



1940 ஆம் ஆண்டு முதல் தொழுநோய்க்கு சிகிச்சை முறைகள் இருந்துள்ளதுடன், 1983 முதல் தொழுநோயை முற்றாகக் குணமாக்கக்கூடிய மருந்துகள் பாவனைக்கு வந்தன. இதன்படி, தொழுநோய் என்பது உரிய சிகிச்சைகளைப் பெற்று விழிப்புணர்வுடன் செயற்படுவதனூடாக முற்றாகக் குணப்படுத்தக்கூடிய நோய் என்பதுடன், தற்போது இந்நோய் அச்சமூட்டக்கூடிய நோய் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், நோயாளிகள் சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்ற அதேவேளை, சமூகத்துடனும் குடும்பத்துடனும் இணைந்தும் வாழமுடியும்.

இந்நோய்க்கிருமிகள் உடலுக்குள் சென்றவுடன் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. நோய்த் தாக்கத்திற்கும் தொழுநோயின் அறிகுறிகள் வெளிப்படுவதற்கும் சுமார் 3 வருடம் முதல் 5 வருடங்கள் வரை ஆகலாம். இதனை 'அடைவுக்காலம்' என்பர். நோய் ஆரம்ப நிலையில் உடல் பாகங்களில் சீழ் வடிதல், தேமல், கொப்புளங்கள் என்பன காணப்படும். உணர்ச்சியின்மை, சுருக்கம், மடிப்பு தசை தொங்குதல் போன்றனவும் மிகுந்து காணப்படும். தொற்றும் தன்மை கொண்ட தொழுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறாதவரின் இருமலினூடாக, வெளியேறும் பக்ற்றீரியாக்களினால் தொழுநோய் பரவக்கூடும். தொழுநோயை ஏற்படுத்தும் பக்ற்றீரியா உடலினுள் உட்புகுவதனூடாக மட்டும் தொழுநோய் ஏற்படமாட்டாது. மனிதர்களில் 90 சதவீதமானவர்களுக்கு நோயுடன் போராடும் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உள்ளது. அதன்படி, பக்ற்றீரியா உடலுக்குள் சென்ற 10 சதவீதமானவர்களுக்கே தொழுநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.





சருமத்தில் தோன்றும் தழும்புகள்

## தொழு நோயாளர்கள் இரு பிரிவினர்

**தொற்றாத வகையைச் சேர்ந்த தொழுநோய்-போசிபெசிலரி (Paucibacillery-PB)**

சருமத்தில் ஐந்திற்கும் குறைவான தழும்புகளைக்கொண்ட தொழுநோய் தொற்றாத வகையினைச் சேர்ந்த போசிபெசிலரி வகையினைச் சேர்ந்தது. இக்கிருமியினால் பாதிக்கப்பட்ட நோயாளி தொடர்ச்சியாக 6 மாதங்கள் சிகிச்சைகளை மேற்கொள்வதனூடாக, நோயினை முற்றாகக் குணப்படுத்திக் கொள்ள முடியும்.

## தொற்றும் வகை தொழுநோய்

மல்ட்டிபெசிலரி (Multibacillery-MP) தழும்புகளின் எண்ணிக்கை ஐந்திற்கும் அதிகமாயின், அது தொற்றும் தன்மை கொண்டது. இவ்வாறு நோய்த் தொற்றுக்கொண்ட நோயாளி தொடர்ச்சியாக 12 மாதங்கள் சிகிச்சையினைப் பெற்றுக்கொள்வதனூடாக, நோயை முற்றாகக் குணப்படுத்த முடியும். எனினும், உரிய சிகிச்சை பெறாத, தொற்றாத தொழு நோயாளர்கள் தொற்றும் தன்மை நோயைப் பெறக்கூடிய அபாய நிலை ஏற்படும்.

## சிகிச்சை பெற தாமதிக்காதீர்கள்!

தொழுநோய் பாதிப்புக்குள்ளாகி சிகிச்சை பெற தாமதமாகும் நோயாளிகளுக்கு உடலில் விகாரமான தன்மைகள் தோன்றும். நரம்புத் தொகுதியை இந்த நோய் தாக்குவதனால் விரல்கள் வளைந்து, பாதங்களில் உள்ள நரம்புகள் செயலிழந்துவிடும். இதனால், பாதங்கள் உணர்ச்சியற்று அடிக்கடி காயமடைந்துவிடும். இவ்வாறான நோயாளிகளின் நோயைக் குணப்படுத்த முடியுமாயினும், இவ்வாறான பக்கவிளைவுகளையும் விகாரமான நிலைமைகளையும் மாற்ற முடியாது. எனினும், நோயின் ஆரம்ப நிலையில் சிகிச்சை பெறுவதனூடாக, விகாரநிலையை முழுமையாகத் தடுத்துவிட முடியும். அத்துடன், உடற்பயிற்சியினூடாகவும், சத்திர சிகிச்சையினூடாகவும் சரிப்படுத்திக்கொள்ள முடியும். எனினும், முன்னர் கூறிய நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் அரச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைகளைப் பெறுவது உகந்ததாகும். தொழுநோயினை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள மேற்கூறப்பட்ட நோய் அறிகுறிகள் இருப்பதுடன், இரத்த மாதிரிப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

## இலங்கையில் தொழுநோய் வரலாறு


16 ஆம் நூற்றாண்டிலும் இலங்கையில் தொழுநோயாளிகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. 1700 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர்கள் இலங்கைக்கு வருகை தந்தபோதும் தொழுநோயாளிகள் இருந்துள்ளனர். 1701 இல் தொழுநோயாளிகளை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கத் தேவையான சட்டத்திட்டங்களும் வகுக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் தொழுநோயாளியான ஒல்லாந்து இளவரசர் ஒருவர் தனது உதவியாளருடன் கப்பலில் இலங்கைக்கு வந்தார். அந்த இளவரசரை தங்க வைப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் 1708 இல் ஹெந்தலை தொழுநோய் வைத்தியசாலையாக மாற்றப்பட்டது. 1901 இல் அன்றைய பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கையில் தொழுநோய் கட்டுப்பாட்டுக்குத் தேவையான சட்டதிட்டங்களை வகுத்தனர். 1940 இல் 'டெப்சோன்' என்ற நோய் எதிர்ப்பு மருந்து அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

1954 முதல் 2001 வரை தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம் இலங்கை முழுவதும் செயலாற்றியது. 2001 இன் பின்னர் மாவட்ட சுகாதார சேவையினூடாகவே தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம் செயலாற்றி வருகின்றது. தற்போது தொழுநோய்த் தடுப்புக்கு பயன்படுத்தப்படும் பல்தரப்பட்ட சிகிச்சை முறை 1983 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதனூடாக, இலங்கையில் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான செயன்முறைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.



## உட்கொள்ளப்படும் மருந்துகளினால் பக்கவிளைவுகள் ஏற்படுமா?

சிகிச்சை பெறும்போது கண், சிறுநீர் என்பன மஞ்சள் நிறமானதாக மாறும். காய்ச்சலும் ஏற்படலாம். இவ்வாறு ஏற்பட்டால் 'ஹெய்டைட்டஸ்' நோய் என்று விளங்கிக்கொள்ள முடியும். தொழுநோய்க்குப் பெறப்படும் மருந்துகள் கல்லீரலைப் பாதிப்பதனால் இந்த நிலைமை ஏற்படும். ஆனால், இது அனைவருக்கும் ஏற்படும் என்று கூற முடியாது. இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சிகிச்சையை நிறுத்திவிட்டு மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதே சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் சாரணர் உலகம்

# குதிரை முகம் தயாரிப்போம்...

சாரணர்கள் கைப்பணிகள்மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் ஏராளம் உள்ளன. அந்தவகையில், வெற்றுப் ப்ளாஸ்டிக் போத்தல் ஒன்றின்மூலம் குதிரை முகம் ஒன்றைத் தயாரிப்பது எப்படி? என்று பார்ப்போம்.



**தேவையான பொருட்கள்:**
- தும்புத்தடி
- ப்ளாஸ்டிக் வெற்றுப்போத்தல்
- நீளமான கயிறு
- துணித் துண்டொன்று
- காதுகளை அமைக்க 2 மட்டைத் துண்டுகள்

**செய்யும் முறை:**


போத்தலின் வாய்ப் பகுதியில் தும்புத்தடியை செருகவும், பின்னர் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, போத்தலின் மறு பகுதியை குதிரை முகத்தோற்றத்திற்கு வளைத்து எடுத்து அதன் வாய்ப் பகுதியை குறிக்கும் விதமாக கயிற்றினை குறுக்கிட்டுக் கட்டிக் கொள்ளவும், அதன் மூக்குப்பகுதியில் போத்தல் மூடியை ஒட்டிக் கொள்ளவும் தொடர்ந்து மட்டையினால் கண்பகுதியொன்றை அமைத்து ஒட்டுவதுடன், மற்றொரு மட்டைத் துண்டை காது வடிவில் வெட்டி ஒட்டிவிடவும். இப்போது குதிரை முகம் தயார்.

# உயரத்தை அளக்கப் பயன்படும் கருவி...

சாரணர்களுக்கு சில சந்தர்ப்பங்களில் வெளியிடங்களில் முகாம் அமைக்கச் செல்கையில், குறிப்பிட்ட இடங்களில் உயரங்களை அளக்க வேண்டிய தேவை எழுவதுண்டு. அந்தவகையில், உயர்ந்த மலைப் பாங்கான பகுதிகளுக்கு விஜயம் செய்தல், மரத்தில் கனியொன்றைப் பறிப்பதற்கு கொக்கியொன்றைத் தயாரித்தல், உயர்ந்த சுவற்றில் வர்ணம் பூசுவதற்கு, எதிரியிடமிருந்து தப்புவதற்கு நிலையெடுக்க வேண்டிய தூரம் மற்றும் உயரம் ஆகியவற்றை தீர்மானிக்க அளவீடு செய்ய வேண்டிய நிலை உங்களுக்கு ஏற்படலாம். இதற்கு சாரண பயிற்சிகளின்போது, நீங்கள் கற்ற பல நுணுக்கங்கள் உங்களுக்குக் கைகொடுக்கலாம். ஆனால், இத்தகைய தேவைகளை ஒருசில நொடிகளுக்குள் அறிந்துகொள்ளக்கூடிய புதுவகைக் கருவியொன்று இருப்பது உங்களுக்குத் தெரியுமா? இதனை 'டிஜிட்டல் உயரமானி' என்று அழைக்கின்றனர்.

### டிஜிட்டல் உயரமானி

பத்து மீற்றர் தொடக்கம் நூறு மீற்றர் தொலைவில் உள்ள மலை/மேட்டுப்பகுதிகள், உயர்ந்த கட்டடப்பகுதிகள் ஆகியவற்றின் உயரத்தை இந்த கருவியைக்கொண்டு இலகுவாக அளக்க முடியும். குறித்த கருவியை தேவைப்படுகின்ற இடத்தை நோக்கிச் செலுத்தும்போது, அப்பகுதியின் உயரத்தை அறிந்துகொள்ள முடியும். அதன்படி, அக்கருவியிலுள்ள டிஜிட்டல் திரையில் உயர அளவீடுகள் தென்படும். இதற்கு குறுகிய ஒரு நேரமே தேவைப்படும்.






உங்களுடைய சாரணர் முகாமின் பயன்மிகு கூடாரங்கள், காவல் அரண்கள் ஆகியவற்றை அமைக்கையில், இந்தக் கருவியைப் பயன்படுத்துவது மிகவும் உபயோகமானதாகும். மேலும், மலை ஏறும்போது, அதற்குத் தேவையான கயிற்றின் அளவைத் தீர்மானித்துக்கொள்ளவும் இக்கருவியின் உயர அளவீடு மிகவும் பயன்தரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கால சாரணர்கள் நவீன தொழில்நுட்ப உலகில் வாழ்வதால். நமது இலக்குகளை இலகுவாக அடைவதற்கு சாரணர்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். ஆகையால், சாரண முகாம்களுக்கு செல்கின்றபோது, இவ்வகையான கருவிகளைப் பயன்படுத்தத் தவறாதீர்கள்.

# கோடரியைக் கையாள்வதில் சாரண வழிமுறைகள்

சாரணர்களில் சகல மட்டங்களைச் சேர்ந்தவர்களும் தமது சாரணர் கோடரியைக் கையாளும் முறையை சரிவர அறிந்திருத்தல் வேண்டும். கோடரியினால் மரக்குற்றியைப் பிளக்கும் விதம், கோடரியை சுமந்து கொண்டு நடக்கும் விதம், கோடரியை இன்னுமொரு சாரணரிடம் ஒப்படைக்கும் விதம், கோடரியைப் பாதுகாப்பாக ஆயுத இராக்கையில் வைக்கும் விதம், கோடரியை தீட்டுதல் ஆகிய விடயங்களை சாரணர்கள் நிச்சயமாக அறிந்திருத்தல் வேண்டும். கீழே வழங்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்புக்களை சரிவரப் பின்பற்றுவதன்மூலம் கோடரியை முறையாகக் கையாள முடியும்.

**மரக்குற்றியைப் பிளத்தல்:**

முறிந்து விழுந்த மரத்தினை வெட்டி ஒதுக்குகையில், கால்கள் இரண்டையும் பாதுகாப்பாக இருபுறமாக அகற்றியவாறு நிற்றல் நல்லது



**கோடரியை பிரயோகித்தல்:**

கோடரியின் வெட்டும் முனைப்பகுதியை சரியான திசையில் செலுத்துதல் வேண்டும். 'V' வடிவில் வெட்டுகையில், அதன் வாய்ப்பகுதி சற்று அகலமாகும் விதமாக வெட்டுதல் வேண்டும். கோடரியின் ஒவ்வொரு வெட்டு வீச்சும் சரியான இடத்தைக் குறிவைத்து வெட்டுவதாக இருக்க வேண்டும். குறிப்பாக, கோடரியின் வெட்டும் முனைப் பகுதியை சாய்வான திசையில் வைத்து ஓங்கி வெட்டுவதால் இலகுவாக வெட்ட முடியும்.




**கோடரியைக் கொண்டு செல்லல்:**

கோடரியை கையில் சுமந்து செல்வதிலும் ஒரு வழிமுறை உள்ளது. அதாவது, கோடரியின் வெட்டும் முனை பின்புறம் பார்த்தவாறு இருக்குமாறும், கோடரியின் கைப்பிடி கீழ் நோக்கி இருக்குமாறும் வைத்துக் கொண்டே அதனை கொண்டு செல்லல் வேண்டும்.




**கோடரியை ஒப்படைத்தல்:**

கோடரியை இன்னுமொரு சாரணரிடம் ஒப்படைக்கும்போது, கோடரியின் வெட்டும் முனை அவரை நோக்காதிருக்குமாறு வைத்துக்கொண்டே ஒப்படைக்க வேண்டும்.




**வெட்டும் முனைக்கு கவசமிடுங்கள்:**



கோடரியின் வெட்டுமுனையைப் பாதுகாப்பதற்காக அதனை உறையொன்றினுள் இடுவதற்கு வசதியாக தோலினாலோ அல்லது கென்வசினாலோ அமைக்கப்பட்ட உறையொன்றை அமைத்துக்கொள்ளுங்கள்.

**கோடரியைத் தீட்டுதல்:**

கோடரியைப் படத்தில் உள்ளவாறு வெட்டும் முனையை மேல்பார்த்தவாறு வைத்துக்கொண்டு, தீட்டும் அரிவாளால் அதன் வெட்டும் முனையை சமகாலத்தில் இரண்டு முனைகளிலும் தீட்டிக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகிலேயே மிகவும் குள்ளமான ஆசிரியர்

## 3 அடி உயரமான இவர், மேசை மீது ஏறிநின்றுதான் கற்பிக்கின்றார்!


அசாத் தனது தாயாருடன்

அவர் ஓர் ஆசிரியர். வயது 22. ஆனால், அவரது உயரமோ 3 அடிகள் மாத்திரமே. பார்க்கும் பார்வைக்கு ஏழு வயது சிறுவனின் தோற்றத்திலேயே இவர் இருப்பார்.

ஆனால், 22 வயது நிரம்பியவர் என்றால் எவருமே நம்பமாட்டார்கள். இந்தியாவின் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த இவரது பெயர், அசாத் சிங். இவரது வளர்ச்சி, ஹோர்மோன் குறைபாட்டின் காரணத்தினால் ஐந்து வயதுடன் முடங்கிவிட்டது. தனது இந்த சிறிய உடம்பைப் பார்த்து சேர்க்கஸ்காரர்கள் தன்னைக் கடத்திக்கொண்டு போய்விடுவார்களோ என்ற பயத்தில் சிறு வயது முதலே வீட்டுக்குள் ஒளிவுமறைவு வாழ்க்கையை இவர் வாழ்ந்து வந்துள்ளார். இந்த காலத்தில் தமக்கு ஏற்பட்ட சோகமான அனுபவங்களே தன்னை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளதாக அசாத் சிங் தெரிவித்துள்ளார்.

தான் ஓர் ஆசிரியராக வரவேண்டும் என்ற இலட்சியத்தோடு, தடைகளை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டதன் பெறுபேறாகவே, இன்று ஒரு கணினித்துறை ஆசிரியராகக் அவர் மிளிர்கின்றார். ஹரியானா மகளிர் கல்லூரியொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் கற்பிக்கும்போது, ஆசிரியர்களுக்கான மேசையின்மீது ஏறி நின்றவாறே பாடங்களைக் கற்பிப்பார். உலகிலேயே குள்ளமான ஆசிரியர் இவராகத்தான் இருக்க முடியும்.

இந்திய ரூபாயில் இவர் ரூ 10 ஆயிரம் சம்பளமாகப் பெறுகின்றார். குள்ளமான தோற்றத்தைக் கொண்டிருந்த





போதிலும், அதையிட்டு தாம் கவலைப்படவில்லை என்றும் வாழ்க்கையில் தான் நினைத்த இலக்கை அடைந்துவிட்ட திருப்தி தன்னுள் இருப்பதாகவும் அசாத் பெருமையுடன் கூறுகின்றார்.

அசாத்தின் 15 வயதான இளைய சகோதரி சுமானும் அசாத் ஆசிரியராக கடமையாற்றும் பாடசாலை அமைந்திருக்கும் இடத்திற்கு சற்று தொலைவிலுள்ள பாடசாலையிலேயே கல்வி கற்கின்றார். பாடசாலைக்கு ஸ்கூட்டரிலேயே தினமும் வருகின்ற இவர், தன்னுடனேயே தனது சகோதரன் அசாத்தையும் அழைத்து வந்துவிடுவது வழமையாக இருந்து வருகின்றது.

தனது மகனைப்பற்றிக் கூறுகின்ற அசாத்தின் தாயார், ''எனது மகன் எப்படியோ மகிழ்ச்சியை அடைந்துவிட்டான் என்பதில் எனக்கு முழுத் திருப்தி, இதுவொன்றே எனக்குப் போதுமானதாகும்'' என்று பூரிப்புடன் கூறுகின்றார். மாணவியர் மத்தியிலும் அசாத்திற்கு நல்ல மதிப்பும் வரவேற்பும் உள்ளதாகவும் கூறப்படுகின்றது. உயரத்தில் குள்ளம் என்றபோதிலும் அந்தஸ்தில் இன்று அவர் உயரத்திற்குப் போய்விட்டார்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 03, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org